**தலைப்பு 307 - மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு - 307 மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட் சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானப் பெறுவனவுகள்**

திணைக்களத்திற்குரிய வருமானப் பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக ஒவ்வொரு வருமான குறியீட்டின் கீழ் நாளாந்தம் கிடைக்கவேண்டிய வருமானம் சரியாக சேகரிக்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வழங்கப்படுகின்ற சேவைகளின் பிரகாரம் வருமானத்தையும் பெற்ற வருமானத்தையும் ஒப்பீடு செய்வதற்கான ஒரு நடைமுறை தயாரிக்கப்படாமையின் காரணமாக வழங்கப்படுகின்ற சேவைகளும் அவை தொடர்பாக அறவிட வேண்டிய வருமானமும் முறைப்படியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்படாது ரூபா 9,636,851,446 தொகையான வங்கிக்கு கிடைத்த வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் காணப்படுகின்ற bank link வருமான கண்காணிப்பு கணினிமுறைமையின் மூலம் திணைக்களத்தின் நாளாந்த வருமான சேகரிப்புக்களை வங்கி கணக்குகளுடன் நாளாந்தம் ஒப்பீடு செய்து உறுதிப்படுத்தியதன் பின்னர் நாளாந்தம் வருமானம் கணக்கீடு செய்யப்படுகின்றன. 2003.02.14, 1003-07-09, 1003-07-04 மற்றும் 2003-02-15 ஆகிய வருமான குறியீடுகளின் கீழ் சேகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த வருமானம் ரூபா 9,636,851,446 சரியானதாகும். | திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்கு இணங்க பெறவேண்டிய வருமானத்தையும் பெற்ற வருமானத்தையும் நாளாந்தம் ஒப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்களின் மூலம் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற வருமானம் சிகாஸ் முறைமையின் மூலம் திணைக்கள தலைப்பிற்கு செலவுவைக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு செலவுவைக்கப்பட்டுள்ள வருமானத்தினை உறுதிப்படுத்துவதற்காக மாவட்ட அலுவலகங்களிடமிருந்து விபரமான வருமான அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க மாவட்ட அலுவலகங்களிடமிருந்து கிடைத்துள்ள ரூபா 5,718,932,894 வருமானம் சரியானது என உறுதிப்படுத்திக் கொள்ளாது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. | நி.பி 135 இன் கீழான அதிகார ஒப்படைப்பிற்கு இணங்க மாவட்ட அலுவலகங்களின் மூலம் சேகரிக்கப்படுகின்ற வருமானம் சிகாஸ் முறைமையின் மூலம் அறிக்கையிடப்படுவதுடன் அதன் சரியான தன்மையானது மாதாந்த கணக்கு பொழிப்புக்களுடன் மாவட்ட அலுவலகங்களை தொடர்புகொண்டு ஒப்பீடு செய்து சரியான தன்மை உறுதிப்படுத்துதல் இடம்பெறுகின்றது. கணக்காய்வுத் தேவைப்பாட்டின் அடிப்படையில் மாவட்ட அலுவலகங்கள் உறுதிப்படுத்தலினை வழங்கலாம். | மாவட்ட செயலகங்களின் மூலம் சேகரிக்கப்பட்டுள்ள வருமானங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய பட்டோலையை மாதாந்தம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (iii) | மாவட்ட அலுவலகங்களின் மூலம் திணைக்கள தலைப்பிற்கு வருமானங்களை செலவுவைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட | 2003-02-14 வருமான குறியீடு தொடர்பான வருமானத்தை செலவு வைக்கும் போது மாவட்ட | பிழைகளை சரிசெய்தல் மேற்கொள்ளப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | குறியீடானது 03 வருமான குறியீடுகளுக்கு பல சந்தர்ப்பங்களில் ரூபா 46,113,388 மொத்த பெறுமதி வரவு வைக்கப்பட்டு திணைக்கள வருமான தலைப்பிற்கு செலவுவைக்கப்பட்ட வருமானம் மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மேற்கூறிய வரவு வைத்தல்களுக்கு காரணமான விடயங்கள் மற்றும் அந்த வரவு வைத்தல்கள் திணைக்களத்திற்குரியதான முறைமையை உறுதிப்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | செயலகங்களின் மூலம் இடம்பெறுகின்ற தவறுகளை சரிசெய்தல்களாக வரவுவைக்கப்பட்ட ரூபா 16,137,940 தொகை மற்றும் இலங்கை தபால் திணைக்களத்தினால் வருமானத்தை செலவு வைக்கும் போது இடம்பெறுகின்ற தவறுகளை சரிசெய்தல்களாக வரவுவைத்த ரூபா 2,422,400 ஆக ஒட்டுமொத்தமாக ரூபா 18,560,340 தொகை வருமான குறியீட்டிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. | ள்ள நாட்குறிப்பு பதிவுகள் மற்றும் அது தொடர்பான துணை ஆவணங்களை மாவட்ட அலுவலகங்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | டோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் 03 வருமான குறியீடுகள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட வருமானத்திற்கு எதிராக ரூபா 121,456,065 மொத்த பெறுமதியானது மேற்கூறிய வருமான கணக்குகளிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த வரவு வைத்தல்களுக்கு காரணமான விடயங்களும் வரவுவைத்தல்களுக்குரிய துணை ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2003-02-14 மற்றும் 1003-07-04 ஆகிய வருமான குறியீடுகளுக்கு முறையே ரூபா 93,696,499 மற்றும் ரூபா 27,744,566 தொகைகள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் மேற்கொண்ட வருமானத்திலிருந்து மீளப் பெற்றுக்கொள்ளலாகும். 2023 மார்ச் மாதத்தில் ATM இயந்திரத்தின் வாடகை வருமானம் 2022-01-01 வருமானத் தலைப்பிற்கு செலவுவைக்கப்பட வேண்டிய போதிலும் பிழையாக அது 1003-07-09 வருமான குறியீட்டிற்கு செலவு வைத்ததனால் இடம்பெற்ற தவறு திசெம்பர் மாதத்தின் போது சரிசெய்யப்பட்டதன் மூலம் இப்பெறுமதி உருவாகியுள்ளது. | துணை ஆவணங்கள் பேணப்படுதல் வேண்டும். |
| (v) | நிதிப்பிரமாணம் 128 (2) (இ), நிதிப்பிரமாணம் 176 (1) மற்றும் 01/2015 ஆம் இலக்க 2015 யூலை 20 அந் திகதிய அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு வருமான குயறியீட்டின் கீழான நிலுவை வருமானத்தினை கணிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்ட வேண்டிய போதிலும் 1003-07-09 ஆம் இலக்க வருமான குறியீட்டின் கீழ் கடந்த ஆண்டிற்கான நிலுவை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், மீளாய்வாண்டின் போது மேற்கூறிய வருமான குறியீட்டின் கீழே ரூபா 7,081,678 நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போதும் மேற்கூறிய | 1003-07-09 என்ற காபன வரி வருமான குறியீட்டின் கீழே சேகரிப்படுகின்ற காபன் வரி 2019-12-01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. 2015/01 ஆம் இலக்க அரசாங்க நிதி கொள்கை சுற்றறிக்கையின் கீழ் இரத்துச் செய்யப்பட்ட அல்லது அறவீடு செய்து முடிவடைந்த வரிகள் தொடர்பான நிலுவை வருமான அறிக்கையை சமர்ப்பித்தல் அல்லது கணக்கீடு செய்யும் தேவைப்பாடு இருக்கவில்லை. | வரி இரத்துச் செய்யப்பட்டிருந்தும் அந்த வரி தொடர்பாக கிடைக்க வேண்டிய நிலுவை வருமான அறிக்கை பேணப்படுதல் வேண்டும். |

வருமான குறியீட்டின் கீழே நிலுவை வருமானம் காணப்படலாம் என்பதனால் நிலுவை வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**(ஆ) மூலதன செலவுகள்**

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான மூலதனச் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | மீண்டுவரும் தன்மையான கொடுக்கல் வாங்கல்களாக வகைப்படுத்தப்பட வேண்டிய மற்றும் மீண்டுவரும் செலவு விடயங்களின் மூலம் செலவு செய்ய வேண்டிக் காணப்பட்ட வேரஹெர அலுவலகத்தின் சாரதி அனுமதிப்பத்திரத்தை அச்சிடுவதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 39,834,000 ஆன டோனர்களைக் கொள்வனவு செய்யும் கிரயம் 307-2-1-1-2509 என்ற செலவு விடயத்தின் கீழ் மூலதன நிதி ஏற்பாட்டின் மூலம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | 307-2-1-0-2509 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் வேரஹெர அலுவலகத்தின் சாரதி அனுமதிப் பத்திரத்தினை அச்சிடும் நடவடிக்கைகளுக்குரிய அனைத்து செலவுகளையும் மேற்கொள்வதற்காகவே நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க டோனர்களை கொள்வனவு செய்தல் உள்ளடங்கலாக இச்செயற்பாட்டிற்காக நேரடியாக தொடர்புபடுகின்ற அனைத்து செலவுகளும் மீண்டுவருபவை அல்லது மூலதனமாக வகைப்படுத்தப்படாது ஒவ்வொரு ஆண்டிலும் இச்செலவு விடயங்களிலிருந்து செலவு செய்யப்படுகின்றது. | வருமான செலவுகளானது மூலதன நிதி ஏற்பாட்டின் மூலம் செலவு செய்யப்படாதிருத்தல் வேண்டும். |
| (ii) | ஏ.சீ.ஏ 2(ii) செலவு கூற்றுக்கு இணங்க மூலதன சொத்துக்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதலின் கீழ் காட்டப்பட்டுள்ள 02 மூலதன செலவு மீதிகளுக்கும் (307-2-1-0-2001, 307-2-1-0-2002) அவை தொடர்பான செலவு பேரேட்டு மீதிகளுக்குமிடையே ரூபா 1,105,650 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | இணங்கிக் கொள்கிறேன். 2024 ஆம் ஆண்டிற்கான செலவுப் பேரேட்டினை சரியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | திணைக்கள பேரேடு சரியாக பேணப்படுதல் வேண்டும். |

**(இ) நிதியற்ற சொத்துக்கள்**

நிதிக் கூற்றுக்களுக்குரிய நிதியற்ற சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீகஹகிவுல கட்டிடத்தினை நிர்மாணித்தலும் வான் அலைவரிசையினூடாக பரீட்சைகளை நடாத்துதலும் (307-2-1-10-2104), மற்றும் கட்டிடங்களை நிர்மாணித்தல் (307-2-1-12-2104) ஆகிய செலவு விடயங்களின் மூலம் ஏனைய திணைக்களம் மற்றும் அமைச்சுக்களின் 14 தலைப்புக்களின் கீழ் மீளாய்வாண்டில் ரூபா 39,367,319 தொகையான மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மேற்கூறிய சொத்துக்களை நிதியற்ற சொத்துக்களில் உள்ளடக்காமையின் காரணமாக நிதியற்ற சொத்துக்கள் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் 307-2-1-10-2104 செலவு விடயங்களின் கீழ் நிதி ஏற்பாட்டுப் பணம் மாவட்ட அலுவலகங்களில் காணப்படுகின்ற கட்டிடங்களை மேம்படுத்துதல் மற்றும் அதிகரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அனைத்து செலவுகளும் மாவட்ட செயலாளர்களுக்கு நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதன் ஊடாக மாவட்ட செயலகங்களினால் செலவு செய்யப்படுகின்றது. இதன் போது ஒரு புதிய சொத்து உருவாக்கப்படாததனால் நிதியற்ற சொத்துக்களாக Cigas முறைமையினுள் உள்ளடக்கப்படவில்லை. | மூலதனச் செலவுகளை தொடர்புபடுத்துகின்ற செலவுத் தலைப்பின் மூலம் சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

**(ஈ) ஆதனம், பொறி மற்றும் உபகரண அணி**

நிதிக் கூற்றுக்களுக்குரிய ஆதனம், பொறி மற்றும் உபகரண அணியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 107,486,776 மொத்தப் பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை திரண்ட நிதியற்ற சொத்தக்கள் கூற்றில் (எஸ்.ஏ.82) உள்ளடக்காமையின் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரண அணியானது அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 68,119,457.00 பெறுமதியான மனைப் பொருட்களும் அலுவலக உபகரணங்களும் கணனி மென்பொருள் Cigas கணனி அச்சுப் பிரதிகளிலிருந்து நீக்கப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியானது சொத்துக்கள் கூற்றில் (SA-52) உள்ளடக்கப்படாததுடன் 2104 செலவு விடயத்தின் கீழ் காணப்படுகின்ற கட்டிடங்களுக்கு மேம்படுத்துதல்கள் மற்றும் அதிகரிப்புக்களுக்காக செலவு செய்யப்பட்டதனால் ரூபா 39,367,319.00 செலவுகளுக்காக சொத்துக்கள் உள்ளடக்கப்படாததனால் அதுவும் சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. | நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரண அணியை முறைப்படியாக கணக்கு வைத்தல் வேண்டும். |

**(உ) வைப்புக்கள்**

நிதிக் கூற்றுக்களுக்குரிய வைப்புக் கொடுப்பனவுகள் மற்றும் மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | மாவட்ட அலுவலகங்களில் பேணப்பட்டு வந்த 03 வைப்புக் கணக்குகள் தொடர்பான ரூபா 2,537,257 தொகையான வைப்பு மீதி ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அவை தொடர்பான காலப்பகுப்பாய்வுடன் தனித்தனி மீதிகளின் பட்டியல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்த வைப்பு மீதியின் சரியான தன்மை மற்றும் நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 உடன் இணங்கியிருத்தலினை பரீட்சிக்க முடியாதிருந்தது. | திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கிற்கு பல ஆண்டுகளாக மாவட்ட அலுவலகங்களினால் பணத்தை செலவு வைத்தல் மற்றும் வரவு வைத்தல் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக காணப்படுகின்ற இந்த இனங்காணமுடியாத மீதி தொடர்பான தகவலகளை வழங்குமாறு அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் சில அலுவலகங்கள் 2023 ஆம் ஆண்டில் வரவு/ செலவு வைத்த பணம் தொடர்பான விபரத்தை அனுப்பிவைத்திருந்தது. இந்த மீதி தொடர்பான காலப்பகுப்பாய்வினைத் தயாரிப்பதற்கு அனைத்து மீதிகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் அவசியமானதாகும். | மாவட்ட அலுவலகத்தின் மூலம் வைப்புக் கணக்கிற்கு மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான விபரமான தகவல்களை உள்ளடக்கிய ஒரு பட்டியலினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருக்குத் தெரியப்படுத்தாது மற்றும் உரிய கொடுக்கல் வாங்கல்களுக்கான விபரமான ஆவணத்தினை மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்காது 2023 ஆம் ஆண்டில் மூன்று வைப்புக் கணக்குகள் தொடர்பாக ரூபா 6,785,391 தொகை ஏனைய தலைப்புக்களினால் வரவுவைத்து நிதி விடுவிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | ஏனைய தலைப்புக்களினால் வைப்புக் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவு வைத்தல்கள் மற்றும் செலவு வைத்தல்களை உறுதிப்படுத்தி ஆவணங்களை உள்ளடக்கிய விபரமான பட்டோலையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்டகை எடுத்தல் வேண்டும். |
| (iii) | மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் 2022 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களின் போதும் 2023 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களின் போதும் | இக்கணக்கு இலக்கத்திற்கு வைப்புக் கொடுக்கல் வாங்கல்கள் செய்ய வேண்டாம் என 2022 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக மாவட்ட செயலகங்களுக்கு தெரியப்படுத்தியதன் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டளவில் | அங்கீகரிக்கப்படாது திணைக்கள வைப்புக் கணக்கு தொடர்பான கொடுக்கல் வாங்கலினை உள்ளடக்குதல் தவிர்க்கப்படுதல் |

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் வைப்புக் கணக்கு தொடர்பாக எக்கொடுக்கல் வாங்கலினையும் றேக்கொள்ள வேண்டாம் என அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் தெரியப்படுத்தியிருந்தும் செலவு வைத்தமைக்கான காரணம் மற்றும் செலவுவைத்த மீதிகள் சம்பந்தமான விபரமான ஆவணங்கள் இல்லாது மீளாய்வாண்டில் ரூபா 1,558,412 தொகை மூன்று வைப்புக் கணக்குகளுக்கு செலவுவைக்கப்பட்டிருந்தது. | பல மாவட்ட செயலகங்கள் வரவு/ செலவு வைத்தல்களை நிறுத்தியுள்ளது. 2024 பெப்ரவரி மாதமளவில் ஒரு மாத்திற்கு ஒரு கணக்கிற்கு 02 கொடுக்கல் வாங்கல்கள் வரை குறைப்பதற்கு முடியுமாக இருந்தது. மேலும் திணைக்களத்தின் வேண்டுதலின் அடிப்படையில் இவ்வாறு மாவட்ட செயலகங்களினால் பொதுவைப்புக் கணக்குகளுக்கு நேரடியாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதனை தவிர்த்துக்கொள்வதற்கு அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம் ஆண்டு இறுதி Year end Process சந்தர்ப்பத்தின் போது தடுப்பதற்கான வேலைத்திட்டத்தினை அமுல்ப்படுத்தலாம் என எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. | வேண்டும். |

**(ஊ) முற்பணக் கணக்கு மீதி**

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | திணைக்கள ஏடுகளுக்கு (சீசீ10 படிவம்) இணங்க இடர்கடன் தனித்தனி மீதிகளுக்கும் முற்பணங்கள் ‘‘பீ’’ கணக்கில் உள்ளடக்கப்பட்ட இடர்கடன் தனித்தனி மீதிகளுக்குமிடையே 70 உத்ததியோகத்தர்கள் தொடர்பாக ரூபா 890,847 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி ரூபா 126,636,539 ஆக இருந்த போதிலும் ரூபா 125,745,692 ஆக முற்பணங்கள் ‘‘பீ’’ கணக்கில் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கான முற்பணங்கள் பீ கணக்கினைத் தயாரிக்கும் போது தொடக்க ஆவணங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டது. அதற்கிணங்க அக்கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனித்தனி மீதிப் பட்டியலிலுள்ள அனைத்து மீதிகளும் சரியானவையாகும். 2023 ஆம் ஆண்டு தொடர்பாக திணைக்களத்தின் சீசீ10 படிவேட்டிலுள்ள சில மீதிகள் பிழையான நிலைமையில் உள்ளதனால் தனித்தனி மீதிகளின் பட்டியலிலுள்ள மீதியுடன் ஒரு வித்தியாசத்தை காட்டுகின்றது. 2024 ஆம் ஆண்டிலிருந்து சீ.சீ 10 கடன் மீதியை சரியாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தனித்தனி மீதிகளின் பட்டியலிலுள்ள கடன் மீதிகளை சரியாக பேணுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 485(4) மற்றும் 2020-08-28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதிசுற்றறிக்கையால் திருத்திய நிதிப்பிரமாணம் 113(6) (ஆ) இன் பிரகாரம் அரசாங்க அமைச்சு/ திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதியானது 03 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்த்துவைக்கப்படாத கடன் மீதி ரூபா 271,683 ஆக இருந்ததுடன் அவற்றில் 05 ஆண்டுகள் வரை தீர்த்துவைக்கப்படாத ரூபா 52,680 கடன் மீதியும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்கிறேன். துரிதமாக தீர்த்துவைத்து செயல்முன்னேற்றத்தினை அறிக்கையிடுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மூன்று மாதங்களுக்குள் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | மரணமடைந்துள்ள ஊழியர்கள் சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4, 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் உத்தியோகத்தர்கள் மரணமைடைந்து 05 ஆண்டுகளுக்கு மேல் காலங்கடந்துள்ள ரூபா 342,200 தொகையான 04 கடன் மீதிகளானது பிணையாளர்களிடமிருந்து அல்லது வாரிசுக்காரர்களிடமிருந்து அறவிட்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். துரிதமாக தீர்த்துவைத்து செயல்முன்னேற்றத்தை அறிக்கையிடுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கடனாளிகளிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளில் 03 மாதங்களிலிருந்து 03 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக காணப்பட்டுவரும் ரூபா 2,674,976 கூட்டுமொத்தமான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். துரிதமாக தீர்த்துவைத்து செயல்முன்னேற்றத்தை அறிக்கையிடுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கடனாளிகளிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | இறுதி தவணைப் பணத்தை அறவிட்டு 05 ஆண்டுகளுக்கு மேல் காலங்கடந்திருந்த சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தரின் அறவிட வேண்டிய ரூபா 171,638 கடன் மீதியையும் 4 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய ரூபா 48,654 கடன் மீதியையும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். துரிதமாக தீர்த்துவைத்து செயல்முன்னேற்றத்தை அறிக்கையிடுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கடனாளிகளிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | சேவையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ள 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,075,449 கடன் மீதியை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அக்கடனாளியிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 826,069 கூட்டுமொத்தமான 11 கடன் மீதிகளும் அவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்கிறேன். துரிதமாக தீர்த்துவைத்து செயல்முன்னேற்றத்தை அறிக்கையிடுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கடனாளிகளிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vii) | ஓய்வூதியத்தினை கைவிட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 154,547 கடன் மீதி 05 ஆண்டுகளுக்கு மேல் பழைமையானதுடன் 4 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய ரூபா 176,565 கடன் மீதியையும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். துரிதமாக தீர்த்துவைத்து செயல்முன்னேற்றத்தை அறிக்கையிடுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கடனாளிகளிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (viii) | 2020-08-28 ஆந் திகதி 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 113(6) (ஆ) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள மேலே (ஊ) பந்தியின் பிரகாரம் காலங்கடந்துள்ள கடன் மீதி சம்பந்தமாகப் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை கவனத்தில் கொண்டு இடமாற்றம் பெறுதல், மரணமடைதல் வேலையிலிருந்து இடைநிறுத்துதல், சேவையை கைவிட்டுச் செல்லல், | உரிய பதிவேட்டினை நாளதுவரையாக்கி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | 2020-08-28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 113(6)(ஆ) இற்கு இணங்க காலங் கடந்த கடன் மீதி சம்பந்தமான நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஓய்வூதியத்தை கைவிடுதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் கடனை அறவீடு செய்ய முடியாது 05 ஆண்டுகளுக்கு மேல் காலம் கடந்த ரூபா 1,547,134 மொத்த பெறுமதியான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ix) | அங்கத்தவர் கடன் பதிவேட்டினை நாளதுவரையாக்கும் அறிவுறுத்தலின் பிரகாரம் அனைத்து சம்பள பட்டியல்களுக்குமாக தனியான பதிவேடு அல்லது பக்கங்களின் தொகுதியை பயன்படுத்தி சம்பளப் பட்டியலின் ஒழுங்கு முறைப்படி அனைத்து ஊழியர்களின் அங்கத்துவ இலக்கம் மற்றும் பெயர்கள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தில் தற்பொழுது சேவையாற்றுகின்ற 31 உத்தியோகத்தர்களின் இடர் கடன் தொடர்பான விபரம் அங்கத்துவ கடன் பதிவேட்டில் (சீசீ10 படிவத்தில்) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அந்த உத்தியோகத்தர் தொடர்பாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 5,324,124 தொகையான கடன் மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட அனைத்து கடனும் தொடக்க பதிவேட்டுடன் பரீட்சிக்கப்பட்டது. அதற்கிணங்க தற்பொழுது சேவையாற்றுகின்ற 31 உத்தியோகத்தர்களின் இடர் கடன் கொடுப்பனவு விபரம் சீசீ 10 பதிவேட்டில் தவறுதலாக உள்ளடக்கப்படவில்லை. 2024 ஆம் ஆண்டிற்கான சீசீ10 பதிவேடு சரியாக தயாரிக்கப்படும். | சீசீ 10 பதிவேட்டினை சரியாக தயாரித்து பேணுதல் வேண்டும். |

**(எ) கணக்காய்வு சான்றுகள் இல்லாமை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 272 (1) இன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்ட அனைத்து கொடுப்பனவு வவுச்சர்களையும் இலக்க ஒழுங்கின் படி தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் ரூபா 2,626,173 பெறுமதியான 07 வவுச்சர்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத இந்த வவுச்சர்கள் வேரஹெர அலுவலகத்திற்கு கொடுப்பனவு செய்வதற்காககாசோலைகளுடன் வவுச்சர்களை அந்த அலுவலகத்திற்கு அனுப்பியதன் காரணமாக தற்பொழுது தலைமை அலுவலகத்தில் இல்லை. இந்த வவுச்சர்களை வேரஹேர அலுவலகத்திடமிருந்து மீளப் பெற்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கொடுப்பனவு முடிவடைந்த வவுச்சர்களை தாமதமின்றி கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

**(ஏ) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுடன் ஏசீஏ.எப் படிவத்தில் நிதி செயலாற்றல் கூற்றினைத் சமர்ப்பிக்கும் போது மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு சம்பந்தமான விபரம் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அது தொடர்பான தரவுகள் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் ஏசீஏ - 7 படிவத்தில் கட்டுநிதி வழங்கல் கூற்றில் 2023 ஆம் ஆண்டிற்கான கட்டுநிதி மீதி உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் 2022 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தவறுதலாக பாதீட்டு நிதி ஏற்பாட்டு நிரல் பூரணப்படுத்தப்படாமை மற்றும் கட்டுநிதி கணக்கிணக்க கூற்றில் 2023 இற்குப் பதிலாக 2022 என்று அச்சுத் தவறினால் உள்ளடக்கப்பட்டுள்ளது. | படிவத்திற்கு இணங்க தரவுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீண்டுவரும் செலவு விடய இலக்கம் 12-1409 இன் கீழ் இலத்திரனியல் மோட்டார் வாகன தரவு முறைமையை (ஈ-மோடோரிங்) அபிவிருத்தி செய்வதற்காக மீய்வாண்டில் ரூபா 80,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் மேற்கூறிய நிதி ஏற்பாட்டில் எந்த பணமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலத்தீரனியல் மோட்டார் வாகன தரவு முறைமை தொடர்பான நடவடிக்கையை ஆரம்கிக்காமையின் காரணமாக அச்செலவு விடயத்தின் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | E-Motoring செயற்திட்டத்தினை துரிதமாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | திறைசேரியின் திரண்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் (எஸ்.ஏ.92) ரூபா 221,217,568 தொகையான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் | சிகாஸ் முறைமைக்கு 2023 ஆம் ஆண்டு தொடர்பான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை உள்ளடக்கும் சந்தர்ப்பத்தில் 2022 ஆம் ஆண்டு தொடர்பாக மாவட்ட அலுவலகங்களில் பழைய பொறுப்பு | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் சரியான பெறுமதிகள் SA92 படிவத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டிருந்தும் நிதிப்பிரமாணம் 94(2) மற்றும்(3) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதியாக ரூபா 218,115,590 உள்ளடக்கப்பட்டதன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 3,101,978 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மீதிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் நீக்கப்படாததனால் மிகுதியாக உள்ளது என அடையாளங் காணப்பட்டது. எனவே SA92 திறைசேரி அச்சு அறிக்கையில் காட்டப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதியினை விட 2023 நிதிக்கூற்றுக்களில் உள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் குறைத்தக் காட்டப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் போது சிகாஸ் முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டு தொடர்பான பழைய பொறுப்புக்கள் நீக்கப்பட்டு சரிசெய்யப்பட்டுள்ளது. | |
| (ii) | முன்னைய கணக்காண்டின் இறுதித் திகதியில் கடப்பாடுகள் மற்றும் பொறுகப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதிருந்த முன்னைய ஆண்டு தொடர்பான ரூபா 54,143,031 செலவுகள் மீளாய்வாண்டில் செலுத்தி விடுவிக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக இப்பொறுப்புக்களை Cigas முறைமைக்குள் உள்ளடக்க முடியாதிருந்தது என தயவாக தெரிவிக்கிறேன். | ஆண்டிற்கான அனைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல வேண்டும். |
| (iii) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 02 (ஆ) பந்தியின் பிரகாரம் அடுத்து வரும் ஆண்டில் செலுத்த வேண்டியுள்ள கடப்பாடுகள் ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிப்பு 03 இல் வெளியிடப்பட வேண்டியிருந்தும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் அடுத்துவரும் ஆண்டில் செலுத்துவதற்கு மிகுதியாக உள்ள 05 நிதிக்குத்தகை தவணைப் பணங்களுக்கான ரூபா 3,751,835 தொகை கடப்பாடாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பின்னர் கொடுப்பனவு செய்ய வேண்டியுள்ள நிதிக் குத்தகை தவணைப் பணத்தின் பெறுமதியை தவறுதலாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு முடியாதிரந்தது. எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உடன்படிக்கை செய்த குத்தகை தொடர்பான தகவல்களை கடப்பாடுகளாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 203 ஆம் அத்தியாயத்திற்கு இணங்க மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் சாரதி பயிற்றுவிப்பாளர்கள் இல்லாது ஒரு பயிலுனர் மோட்டார் வாகனத்தை தனியாக ஓட்டுதல் சட்டதினால் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான பின்னணியில் சாரதி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளும் எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்த ஒரு விண்ணப்பதாரருக்கு சாரதி பயிற்சிக்காக L பலகை வழங்கப்பட்டிருந்தும் மேற்கூறிய L பலகையினைப் பயன்படுத்தி உரிய விண்ணப்பதாரருக்கு மோட்டார் வாகனம் ஓடுவதனை பயில்வதற்கு வாய்ப்பு இல்லை. எனினும் அனைத்து எழுத்துமூல பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரருக்கு L பலகையினை வழங்குதல் மற்றும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதற்காக L பலகையை கொள்வனவு செய்வதற்காக ரூபா 162,495,000 தொகையான அரசாங்க நிதியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சாரதி அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கு எதிரிபார்க்கின்ற ஒரு விண்ணப்பதாரர் எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர் செயன்முறைப் பரீட்சைக்காக அண்ணவாக 03 மாத காலம் வழங்கப்படுவதாவது விண்ணப்பதாரருக்கு தகமை பெற்ற பயிற்றுவிப்பாளரிடமிருந்து செயன்முறைப் பயிற்சியைப் பெற்று தனியாக வாகனத்தை வீதியில் ஓடுவதற்கான இயலுமையை வழங்குவதற்காகவாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது அவர்கள் சாரதிப் பாடசாலைகளுடன் தொடர்புகொண்டு உரிய பயிற்சியை பெற்றுக்கொள்கின்ற அதேவேளை தமது வாகதன்தை தகமைபெற்ற பயிற்றுவிப்பாளருடன் பயிற்சிபெறும் வாய்ப்பு உள்ளதனால் அதற்காக தேவையான ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்தைக் கொண்ட எல் பலகையானது பணம் அறவிட்டு இத்தீணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்றது. எல் பலகைக்காக ரூபா 162,495,000 செலவு செய்யப்பட்டிருந்தும் கட்டணத்தை அறவிட்டு வழங்குவதனால் உரிய செலவு மீளப் பெற்றுக்கொள்ளப்படுகின்றது என தயவாக தெரிவிக்கிறேன். | அத்தியவசியமான செலவுகளுக்காக மாத்திரம் அரசாங்க நிதி செலவு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் சாரதி அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் தரவு முறைமைக்கு இணங்க ஒரு ஆண்டிற்குள் வழங்கப்படுகின்ற சாரதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை அண்ணளவாக 400,000 ஆக இருந்ததனை கவனத்திற்கு எடுத:து இப்பெறுகையைப் பயன்படுத்தி அண்ணளவாக 03 ஆண்டுகளின் போது வழங்கி முடிவுறுத்த முடியாத அளவான 1,800,000 L பலககளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததன் | வருடாந்தம் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்ற எண்ணிக்கை 400,000 ஆக இருநதுதம் அதற்கிணங்க L பலகையின் தேவைப்பாடு தீர்மானிக்கப்பட்டுவதில்லை. சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் L பலகையை கொள்வனவு செய்தல் தீர்மானிக்கப்படுகின்றது. | தேவைப்பாட்டிற்கு இணங்க செலவு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக தேவையற்ற வகையில் தேவையில்லாத செயற்பாடுகளுக்காக அரசாங்க நிதி பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 பிரிவின் பிரகாரம் சந்தை விலை நிர்ணய முறைமையின் கீழ் ரூபா 10 மில்லியனை மிகைத்த பெறுகைகளுக்காக அமைச்சு பெறுகை குழு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அமைச்சு பெறுகைக் குழுவிற்கு அனுப்பிவைக்காது ரூபா 12 மில்லியனுக்கு மிகையான பெறுமதியினைக் கொண்ட பதிவுசெய்தல் சான்றிதழினை தபாலில் இடும் யன்னல்களுடனான கடித உறையை அச்சிடும் பெறுகையானது திணைக்கள பெறுகைக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உடன்படிக்கையில் குறிப்பிட்ட ரூபா 12 மில்லியனான பெறுகையானது சந்தை விலை நிர்ணய முறைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒரு பெறுகை அல்லாததுடன் மட்டுப்படுத்திய விலை கோரல் முறைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பெறுகையாகும். | பெறுகை வழிகாட்டிக் கோவையில் குறிப்பிட்ட எல்லைக்குள் பெறுகை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஈ) | வாகனங்களை அடையாளங் காணும் இலக்கத்தகடுகளை வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தின் உடன்படிக்கை செய்த விலையை மீண்டும் திருத்தம் செய்தல் | | |
| (i) | வாகனங்களை அடையாளங்காணும் இலக்கத்தகடுகளை வழங்குவதற்கான ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட கேள்வி கோரல் ஆவணங்களுக்கு மத்தியில் கோள்விதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் தொகுப்பின் முதலாம் பிரிவிற்கு இணங்க சர்வதேச விலை கோரல் முறைமையில் விலை மனுக்கள் கோரப்பட்டது எனவும் விலை மனுக்களை இலங்கை தொலைக் காட்சியில் காண்பித்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க சர்வதேச விலை மனுக் கோரல்களின் மூலம் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டுள்ளதனால் மற்றும் வெற்றிகரமான கேள்விதாரர் ஜேர்மன் கம்பனியாக இருக்க வேண்டும் என்பதனைப் போல் உரிய ஜேர்மன் கம்பனிக்காக உள்நாட்டு முகவர் நிறுவனம் உடன்படிக்கை செய்திருத்தல் போன்ற விடயங்களை கவனித்துப் பார்க்கும் போது சர்வதேச போட்டி விலை கோரல் முறைமைக்கு கேள்வி மனுக்களை கோரி ஒப்பந்த உடன்படிக்கை கைசாத்திடப்பட்டுள்ள செயற்படும் நிலையில் காணப்படுகின்ற உடன்படிக்கைக்காக டொலரில் செலுத்திய இலங்கை ரூபாவின் அளவு மாற்றமடைந்ததன் அடிப்படையில் உடன்படிக்கை செய்த விலைகளின் திருத்தத்திற்காக பெறுகை வழிகாட்டிக் கோவையில் ஏற்பாடுகள் | வாகனங்களை அடையாளங்காணும் இலக்கத்தகடுகளை வழங்கும் நிறுவனமான எக்ஸஸ் இன்டர்நெசனல் (தனி) லிமிடட்டினால் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளருக்கு விலைகளை அதிகரிக்குமாறு 2022-06-21 ஆந் திகதி சமர்ப்பித்த வேண்டுதல் சம்பந்தமாக MT/50/2022 ஆம் இலக்க 2022-08-02 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| உள்ளடக்கப்படவில்லை. அதற்கிணங்க இந்த விலைத் திருத்தம் பெறுகை வழிகாட்டிக் கோவைவிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு முரணானது என அவதானிக்கப்பட்டது. | சமர்ப்பிக்கப்பட்டது. அதற்காகத் கிடைத்த அமைப/22/1104/608/010 ஆம் இலக்க 2022-08-22 ஆந் திகதிய அங்கீகாரத்தின் மூலம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் அமைச்சரவையினால் நியமித்த விலைகளை பேரம் பேசும் குழு (CANC) நியமிக்கப்பட்டது. அந்த அமைச்சரவை விஞ:ஞாபனத்தின் மூலம் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விலை அதிகரிப்பு சம்பந்தமாக வழங்கப்பட்ட சிபாரிசின் பிரகாரம் அமைச்சரவையின் மூலம் நியமிக்கப்பட்ட விலையை பேரம்பேசுதல் குழுவின் (CANC) சிபாரிசு சமர்ப்பிக்கப்பட்டது. அச்சிபாரிசு சமர்ப்பிக்கப்பட்ட MT/123/2022 ஆம் இலக்க 2022-12-30 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பித்து அதற்காக அமைப/23/0023/608/002 ஆம் இலக்க 2023-01-16 ஆந் திகதிய |

| | | | |
|---|---|---|---|
| | | அமைச்சரவை தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது. அத்தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | இவ்விலை திருத்தத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்னர் வாகன இலக்க தகடுகளிலிருந்து மாகாண எழுத்தை நீக்கும் செயற்திட்டத்திற்காக வாகனங்களை ஒழுங்குபடுத்துதல், பஸ் போக்குவரத்து சேவை, மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் (அபிவிருத்தி) தலைமையில் 2023 மார்ச் 14 ஆந் திகதி இராஜாங்க அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலுக்காக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மூன்று உத்தியோகத்தர்கள் மற்றும் வழங்குனரின் உள்நாட்டு முகவர் நிறுவனத்திற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் தொடர்புபட்டுள்ளதுடன் அதன்போது உடன்படிக்கை செய்த இலக்கத் தகடுகளின் அளவினை வழங்குவதற்குத் தேவையான மூலப் பொருட்களுக்காக அச்சந்தர்ப்பம் வரை கட்டளையிடப்பட்டுள்ளது எனவும் மாகாண எழுத்துக்களை நீக்குவதன் மூலம் உடன்படிக்கை செய்த இலக்கத்தகடுகளின் அளவினை வழங்க முடியாது போகுமாயின் அவர்களுக்கு நட்டம் ஏற்படும் எனவும் வழங்குனர் நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழுவிசைச் சந்தித்து தெரியப்படுத்தப்பட்டது என குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூலப்பொருட்களின் அளவினை இந்த விலைத் திருத்தத்திற்கு வேண்டுகோள் விடுப்பதற்கு முன்னர் வழங்குனரினால் இறக்கமதி செய்யப்பட்டுள்ளது என உறுதி செய்யப்படுகின்ற போதிலும் அது தொடர்பாக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது விலைத் திருத்தத்திற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வாகனங்களை அடையாளங்காணும் இலக்கத் தகடுகளை வழங்குகின்ற நிறுவனமாகிய எக்சஸ் இன்டநெசனல் (தனி) லிமிடட்டினால் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்க் அமைச்சின் செயலாளரக்கு விலையை அதிகரிக்குமாறு 2022-06-21 ஆந் திகதி சமர்ப்பித்த வேண்டுதல் சம்பந்தமாக MT/50/2022 ஆம் இலக்க 2022-08-02 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்காக கிடைத்த அமைப/22/1104/608.010 ஆம் இலக்க 2022-08-22 ஆந் தகிதிய அங்கீகாரத்தின் மூலம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் அமைச்சரவையின் மூலம் நியமிக்கப்பட்ட விலை பேரம் பேசுதல் குழு (CANC) நியமிக்கப்பட்டது. அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் மதிப்பீட்டுக் குழுவினால் விலை அதிகரிப்பு சம்பந்தமாக வழங்கியுள்ள தீர்தமான சிபாரிசின் பிரகாரம் அமைச்சரவையின் மூலம் நியமித்த விலை பேரம் பேசுதல் குழு (CANC) விலை | பெறுகையுடன் தொடர்புபட்ட அனைத்து தகவல்களையும் தீர்மானம் எடுப்பதற்கு தொடர்புபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதிகரிப்பு சம்பந்தமாக சிபாரிசினை சமர்ப்பித்துள்ளது. | |
| (iii) | அமைப/22/1104/608/010 ஆம் இலக்க 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க போக்குவரத்து அமைச்சின் செயலாளரினால் ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு செயற்திட்ட குழு நியமிக்கப்பட்டதுடன் 2022 நவம்பர் 22 ஆந் திகதி மேற்கூறிய குழுவின் அறிக்கை அமைச்சரவையினால் நியமித்த (CANC) குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வழங்குதல் விலையை திர்மானிக்கின்ற ஏனைய எந்த விடயங்கள் தொடர்பாகவும் மதிப்பீடு செய்யப்படாது நாணயமாற்று விகிதத்தின் மாற்றத்தை மாத்திரம் கவனத்திற்கு எடுத்து குழு அறிக்கை தயாரிக்கப்பட்டதுடன் நாணயமாற்று விகிதத்தின் மாற்றத்தின் மூலம் வழங்கல் விடயத்தின் விலைகளுக்கான தாக்கத்தினையேனும் கணிப்பீடு செய்யாது வழங்குனருடன் கலந்துரையாடி இணங்கிக் கொண்ட விலைத்திருத்தத்தினை வழங்குவதற்கு பொருத்தமானது என திர்மானித்திருந்ததன் காரணமாக செயற்திட்ட குழு தமது பொறுப்பினை முறையாக நிறைவேற்றியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | செயற்திட்ட குழுவும் அதன் செயற்பாடும் இத்திணைக்களத்தின் நோக்கெல்லைக்கு புறம்பான ஒரு விடயமாகும். அதற்கிணங்க இப்பந்திக்கான பதிலை வழங்குவது சம்பதமாக போக்குவரத்து அமைச்சின் உரிய பிரிவிற்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. | பொறுப்பு வகிக்கின்ற உத்தியோகத்தர்கள் தமது கடமையை சிறப்பாக நிறைவேற்றுதல் வேண்டும். |
| (iv) | அமைப/22/1104/608/010 ஆம் இலக்க 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவையினால நியமித்த விலை திருத்த குழுவிற்கு மேற்கூறிய அறிக்கையில் விலையை அதிகரித்தலினை நியாயப்படுத்துவதற்காக நடைமுறைச் சாத்தியமான தர்க்கரீதியான விடயம் உள்ளடக்கப்படாதிருந்தும் விலை அதிகரிப்பதற்காக வழங்கனரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையினைத் தவிர வேறு எந்த ஆய்வு, மதிப்பீடு தொடர்பாக குறிப்பிடப்படாது வழங்குனருடன் இணங்கிகொண்ட மதிப்பீடாக அடிப்படை இன்றி 62.5 சதவீத விலை அதிகரிப்பு பிரேரணையினை உள்ளடக்கி 2022 நவம்பர் 29 ஆந் திகதி குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக | -மேற்படி- | பொறுப்பு வகிக்கும் உத்தியோகத்தர்கள் தமது கடமையை சிறப்பாக நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விலை திருத்த குழு தமது பொறுப்பினை முறையாக நிறைவேற்றியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |
| (v) | MT/123/2022 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தில் மேற்கூறிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அவதானிப்புக்களுக்கு இணங்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 2.5 ஆம் பிரிவிற்கு இணங்க விலையை அதிகரிப்பதற்கான இயலுமை உள்ளதா என சட்டமா அதிபரினை விசாரித்து ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுதல் பொருத்தமானது என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க விலைத் திருத்தத்திற்காக அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 30 இற்கு இணங்க உடன்படிக்கையில் சட்டரீதியான ஏற்பாடு காணப்படுகின்றதா என 2023 பெப்ரவரி 09 ஆந் திகதிய DMT/11/DE/02 ஆம் இலக்க கடித்தின் மூலம் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் சட்டமா அதிபரிடம் விசாரிக்கப்பட்டிருந்ததுடன் ‘‘மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஊடக அறிவித்தலில் அடங்கியுள்ள விடயம்’’ உடன்படிக்கையின் 30 ஆம் பிரிவில் உள்ளடங்கியுள்ளவை நோக்கெல்லைக்கு உரியதல்லாதது என சட்டமா அதிபரினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த து. எனினும் சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தினை தொடர்புபடுத்திக்கொள்ளாது விலை திருத்தத்திற்காக தேவையான ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிட்ட பிரிவினை திருத்தம் செய்து திருத்தத்திற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் திருத்திய நிபந்தனையை உள்ளடக்கிய வரைபு அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. | MT/50/2022 ஆம் இலக்க 2022-08-02 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 2.5 ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறு விலையை அதிபரிப்பதற்கு இயலுமை உள்ளதா என்பது தொடர்பாக DMT/H/DE/04/02 ஆம் இலக்க 2023-02-09 ஆந் திகதிய கடித்தின் மூலம் கௌரவ சட்டமா அதிபரின் அபிப்பிராயம் கேட்கப்பட்டு, CL/34/2023 ஆம் இலக்க 2023-04-19 ஆந் திகதிய கடித்தின் மூலம் கௌரவ சட்டமா அதிபரின் அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது. எடுக்கவேண்டிய மேலதிக நடவடிக்கைகள் சம்பந்தமாக கௌரவ சட்டமா அதிபரின் அபிப்பிராயமானது DMT/H/DE/04/02/05 ஆம் இலக்க 2023-07-17 ஆந் திகதிய கடித்தின் மூலம் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு செயலாளரிடம் ஆலோசனை வேண்டப்பட்டுள்ளது. அந்த ஆலோசனை வேண்டுதல்களுக்கு இணங்க 2023-08-03 ஆந் திகதி பெருந்தெருக்கள் அமைச்சில் ஒரு கூட்டம் நடாத்தப்பட்டது. அக்கூட்டத்தின் போது கிடைத்த ஆலோசனைகளுக்கு இணங்க | அமைச்சரவைக்கு சரியான தகவல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | உடன்படிக்கையின் வரைபு தொடர்பாக சிபாரிசு வழங்கப்பட்டுள்ளது. |

**3.2 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) அமைப/16/1307/709/061 ஆம் இலக்க 2016 செப்தெம்பர் 07 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க சட்டரீதியான சுங்க நடைமுறைகளின்றி இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிளின் எரிபொருள் இயலளவினை அடிப்படையாகக் கொண்டு மிகைக் கட்டணம் அறவிடுவதற்கு உட்பட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்தல் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க இன்ஜின் இயலளவு 201-250 CC தொகுதியிலுள்ள மோட்டார் சைக்கிள்களுக்காக அறவிட வேண்டிய மிகைக் கட்டணம் ரூபா 200,000 ஆக இருந்த போதிலும் அதற்கு இணக்கமற்ற வகையில் ரூபா 50,000 இலிருந்து ரூபா 65,000 வரையான கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டு 55 மோட்டார் சைக்கிள்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தமையின் காரணமாக அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 8,080,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | இது சம்பந்தமான உங்களின் அவதானிப்பினை தவிர்க்க முடியாத போதிலும் விசேட செயற்பாட்டின் போது கொடுப்பனவினை மேற்கொள்வதற்காக “நானாவித கொடுப்பனவுகள்” (Miscellaneous) முறைமையைப் பயன்படுத்துவதற்கு கணனி முறைமையில் இயலுமை உள்ளதனால் மற்றும் இச்செயற்பாட்டிற்கான அறவீட்டினையும் அந்த முறைமைக்கு இணங்க மேற்கொள்ளும் இயலுமை உள்ளதுடன் அதன் போது தொடர்பு இலக்கத்தினை தெளிவாக குறிப்பிட்டிருக்காத சந்தர்ப்பத்தில் அதனை அடையாளங் காண்பதற்கு கணனி முறைமையினுள் இயலுமை இல்லாததுடன் அதன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களுக்காக அறிவிடப்பட்ட பணத்தை உறுதியாக இனங்காண முடியாது . எவ்வாறாயினும் “நானாவித கொடுப்பனவுகள்” (Miscellancous) நடைமுறையின் | முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு இழக்கப்பட்ட வருமானத்தினை பொறுப்புக்கூற வேண்டியவர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கீழ் இத்தொகுதியிலுள்ள மோட்டார் சைக்கிள்களுக்காக சில அறவீடுகளை இனங்கண்டு கணனி முறைமையின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்ததுடன் அதற்கிணங்க அந்த அறவீடுகளானது மேற்கூறிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் என அவதானிக்கப்பட்டது. | |
| (ii) | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இன்ஜின் இயலளவு 251-450CC தொகுதியிலுள்ள மோட்டார் சைக்கிள்களுக்காக அறவிட வேண்டிய மிகைக் கட்டணம் ரூபா 350,000 ஆக அமைச்சரவை தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தும் அதற்கு இணக்கமற்ற வகையில் ரூபா 50,000 இலிருந்து ரூபா 300,000 வரையான கட்டணம் மாத்திரம் அறவிட்டு 241 மோட்டார் சைக்கிள்கள் பதிவுசெய்யப்பட்டிருந்ததன் காரணமாக அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 70,070,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு இழக்கப்பட்ட வருமானத்தை பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |
| (iii) | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க பொதுமக்களுக்கு மேற்கூறிய நிவாரணம் தொடர்பாக ஊடக வெளிப்படுத்தல் வழங்கிய 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதியிலிருந்து 04 மாத நிவாரண காலத்திற்குள் பதிவுசெய்தல் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய முடிவுறுத்த வேண்டிய திகதியான 2016 திசெம்பர் 30 ஆந் திகதியிலிருந்து அடுத்துவரும் 05 மாத காலம் அமைச்சரவை அங்கீகாரம் இல்லாதும் பதிவு செய்வதற்குத் தேவையான சட்டரீதியான ஆவணங்கள் இல்லாதும் 3088 மோட்டார் | ஏற்றுக்கொள்கிறென். இப்பதிவு செய்தல் 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளதனால் அது சம்பந்தமாக தற்பொழுது எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை துரிதமாக ஆராய்ந்து பார்க்குமாறு உரிய உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப்பட்டதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு இழக்கப்பட்ட வருமானத்தை பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சைக்களிசகள் பதிவு செய்யபப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | | வேரஹெர உணவுச் சாலையின் குத்தகைப் பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (i) | பெறுகை குழுத் தீர்மானத்திற்கு இணங்க 2019-2020 ஒரு ஆண்டு காலத்திற்காக மாதாந்தம் ரூபா 391,000 தொகைக்கு வேரஹெர உணவுச் சாலை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 மார்ச் 31 ஆந் திகதி வரை குத்தகைதாரரினால் உணவுச்சாலை நடாத்தப்பட்டிருந்தது. குத்தகைதாரரிடமிருந்து ரூபா 2,964,400 நிலுவைக் குத்தகைப் பணம் அறவிட வேண்டியிருந்தும் ரூபா 1,173,000 தொகையான செயலாற்றல் பிணை முறியினை அவருக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 03 மில்லியனுக்கு அண்மித்த நிலுவையான குத்தகைப் பணம் ஒன்று சேரும் வகையில் குத்தகைப் பணத்தை அறவீடு செய்யாது உணவுச் சாலையை நடாத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல் மற்றும் நிலுவை குத்தகை காணப்பட்டிருந்தும் செயலாற்றல் பிணைமுறியை விடுவிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட சட்டரீதியான ஆவணம் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வேரஹெர மற்றும் நாரஹேன்பிட்டி சுற்றாடலில் அமைக்கப்பட்டுள்ள வெளி நிறுவனங்களிடமிருந்து வாடகை/ குத்தகைப் பணம் அறவீடு செய்வது சம்பந்தமாக ஒவ்வொரு பந்தியிலும் உருவாகியுள்ள குத்தகைப் பணத்தை சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் நிலுவை வருமானம் சம்பந்தமாக உங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். அதற்கிணங்க இந்த குத்தகை/ வாடகை பணத்தை முறைப்படியாக அறவீடு செய்தல் மற்றும் அரசாங்க வருமானத்திற்கு கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு இழக்கப்பட்ட வருமானத்தை பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மேற்கூறிய உணவுச்சாலை மீண்டும் 2021 இலிருந்து 2023 வரையான காலத்தில் ரூபா 261,000 மாதாந்த குத்தகை அடிப்படையில் ஏனைய தனிப்பட்டவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் நிலுவையான வாடகை வருமானம் ரூபா 3,132,000 வரை ஒன்றுசேரும் வரை உணவுச்சாலையை நாத்துவதற்கு விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. செயலாளற்றல் பிணைமுறியையும் அவ்வப்போது அறவிடப்பட்ட பணத்தையும் சேர்த்து நிலுவை வருமானம் ரூபா 1,133,000 வரை குத்தகைதாரரிடமிருந்து பணம் அறவீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மேற்கூறிய நிலுவை வருமானத்தை அறவீடு செய்யாது உணவுச்சாலையினுள் காணப்பட்ட குத்தகைதாரரின் ஆதனத்தை அப்புறப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு இழக்கப்பட்ட வருமானத்தை பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |
| (iii) | வேரஹெர உணவுச்சாலையை வாடகைக்கு வழங்கியிருந்த கடந்த மூன்று சந்தர்ப்பங்களையும் கவனத்திற்கு எடுத்துக் கொள்கையில் ரூபா 327,000, ரூபா 341,000 மற்றும் ரூபா 236,000 வீதம் மாதாந்த வாடகை அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க வேரஹெர உணவுச்சாலைக்காக மாதாந்தம் ரூபா 300,000 குத்தகை வருமானம் கிடைக்க வேண்டியிருந்ததுடன் ஒரு ஆண்டிற்கான குத்தகை வருமானம் ரூபா 3,600,000 | -மேற்படி- | முறையான பெறுகை நடைமுறையில் குத்தகைதாரர் தெரிவுசெய்யப்பட வேண்டியதுடன் துரிதமாக மதிதப்பீட்டு அறிக்கையினைக் கோரி நலன்புரிச் சங்கத்திடமிருந்து நியாயமான குத்தகையை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகும். எவ்வாறாயினம் எந்த குத்தகைப் பணமும் அறவீடு செய்யப்படாது இந்த உணவுச்சாலை 2023 மார்ச் மாத்திலிருந்து நலன்புரிச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 3,000,000 தொகையான வருடாந்த வாடகை வருமானம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | தலைமை அலுவலகத்தில் மற்றும் வேரஹெர வளவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உணவச்சாலையைத் தவிர்த்து ஏனைய நிறுவனங்களிடமிருந்து கடந்த 05 ஆண்டுகள் காலத்தில் ரூபா 2,507,600 தொகையான நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தும் மேற்கூறிய வருமானத்தை அறவீடு செய்வதற்கு அல்லது நிலுவை வருமானமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு இழப்கப்பட்ட வருமானத்தை பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

## 3.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படாமை

திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட பின்வரும் விபரங்களைக் குறிப்பிட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்காக 2024 மே 31 ஆந் திகதி வரையும் பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பான விபரம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பதிவுசெய்த சான்றிதழ், செஸி இலக்கம் மற்றும் ஏனைய தரவு திருத்தங்கள் சம்பந்தமாக 2022/2023 ஆம் ஆண்டில் கிடைத்துள்ள விண்ணப்பங்கள் மற்றும் அவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் | 03 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு துரிதமாக பதிலை வழங்குமாறு உத்தியோகத்தர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது . | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மாத்தறை கிளையில் சாரதி அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் நடைமுறை மற்றும் வழக்கமான நிருவாக செயற்பாடுகள் தொடர்பான கணக்காய்வு பரீட்சிப்பு | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வேரஹெர மற்றும் நாரஹேன்பிட வளவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஏனைய நிறுவனங்களிடமிருந்து குத்தகைப் பணத்தை அறவீடு செய்தல் தொடர்பான பரீட்சிப்பு | -மேற்படி- | -மேற்படி- |

## 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் (203 ஆம் அத்தியாயத்தின்) XII ஆம் பகுதியில் அடங்கியுள்ள நிறைவுகாண் ஒழுங்குவிதி இலக்கம் 231 இற்கு இணங்க இந்த அதிகாரச் சட்டம் அல்லது ஏதாவது கட்டளையின் கீழ் வழங்கப்படுகின்ற சான்றிதழ் அனுமதிப்பத்திரம், காணாமல் போகுகையில் அல்லது அழிவடைகையில் இணைப் பிரதியினை வழங்கலாம். எனினும் அதற்கு இணக்கமற்ற வகையில் மோட்டார் வாகனத்தை பதிவுசெய்யும் சான்றிதழின் இரண்டாவது பிரதியினை வழங்கி 05 ஆண்டுகளிலிருந்து 25 ஆண்டுகள் வரையான காலத்தின் பின்னர் 2023 ஆம் ஆண்டில் 19 சந்தர்ப்பங்களின் போது சத்திய பிரமாணத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட | மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஒரு மோட்டார் வாகனத்தின் தொடக்க பதிவுசெய்தல் சான்றிதழ் அழிவடைந்த அல்லது காணாமல் போனதன் பின்னர் வழங்கப்படுவது இணைப்பிரதி என்ற உங்களின் சுட்டிக்காட்டுதலுடன் நான் இணங்குகிறேன். எவ்வாறாயினும் கடந்த பல ஆண்டுகளில் மூலப் பிரதிக்குப் பதிலாக இணைப்பிரதியினை வழங்குவதன் மூலம் பல்வேறு சிக்கல்களுக்கும் மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யும் போது பல்வேறு கஸ்டங்களுக்கும் அதேபோல நட்ட நிலைமைகளுக்கும் மோட்டார் வாகனங்களை பதிவுசெய்யும் உரிமையாளர் முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது என எனக்கும் அதேபோல எனக்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஆணையாளர் நாயகங்களுக்கும் பல்வேறு பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.<br>அவ்வாறே பாராளுமன்ற உறுப்பின்ர்களுக்கும் | காணப்படுகின்ற சட்ட எற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டுதல்களுக்கான பரிகாரமாக முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்தல் சான்றிதழின் இரண்டாம் பிரதிக்குப் பதிலாக மோட்டார் வாகனத்தை பதிவுசெய்தல் சான்றிதழின் மூலம் பிரதி வழங்கப்பட்டிருந்தன. | இது சம்பந்தமாக வேண்டுதல்கள் விடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த வேண்டுதல்கள் எனக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. அதற்கிணங்க இரண்டாம் பிரதியினை இணைப் பிரதியாக (Duplicate) வழங்க வேண்டாம் என வேண்டிக்கொண்ட சமூகத்தில் பேச்சுக்கள் உருவாகியிருந்தது என நானும் அவதானித்தேன். அதற்கிணங்க Duplicate என்பதனை நீக்குவதற்கு உள்ள இயலுமையினை ஆராய்ந்து பார்ப்பதற்கு திணைக்களத்தில் ஒரு குழு நியமிக்கப்பட்டு விடயங்கள் ஆராய்ந்து பார்க்கப்பட்டது.<br>அதற்கிணங்க எதிர்காலத்தில் அனைத்து பிரசைகளும் உரிய லேப் பிரதி காணாமல் போகுதல் அல்லது அழிவடைதலின் அடிப்படையில் புதிய பிரதியினை வேண்டும் போது இணைப்பிரதி என்பதனை சான்றிதழில் குறிப்பிடாது வழங்குவதற்கு உரிய சட்டரீதியான ஏற்பாட்டினை ஏற்படுத:துவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | வாகனங்களை பதிவுசெய்யும் சான்றிதழின் இரண்டாம் பிரதிக்குப் பதிலாக மூலப்பிரதியை வழங்கியுள்ள 06 வாகனங்கள் தொடர்பாக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது அந்த பதிவுசெய்தல் சான்றிதழின் பிரதியை பெற்றுக்கொள்வதனை முன்னிட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 03 சத்தியப்பிரமாணங்களும் ஒரே கையொப்பம் மற்றும் ஒரே வடிவமைப்பிலும் ஏனைய 03 சாத்தியப் பிரமாணங்களும் ஒரே கையொப்பம் மற்றும் ஒரே வடிவமைப்பிலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையும்<br>இரண்டாம் பிரதியை மூலப் பிரதியாக மாற்றம் செய்சவதற்கான ஏற்பாடு உள்ளடக்கப்பட்டிருந்தமையும்<br>அவ்வாறான அறிமுகப்படுத்தல் செய்யப்படவில்லையாயின் எந்தவொரு நபருக்கும் இரண்டாம் பிரதியை சமர்ப்பித்து மூலப்பிரதியை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் மட்டுப்படுத்தப்பட்ட நபர்களுக்கு இச்சந்தர்ப்பத்தினை வழங்குவதன் மூலம் ஏனைய இரண்டாம் பிரதீயை பெற்றுள்ள நபர்களின் மனித உரிமை | தற்பொழுத அமுல்ப்படுத்தப்படுகின்ற மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மூலப் பிரதியாக மாற்றுவதற்கான பிரிவு எதுவும் இல்லை என ஏற்றுக்கொள்கிறேன். அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்படுவது சான்றிதழ் அனுமதிப்பத்திரம் அல்லது அதிகாரப் பத்திரம் காணாமல் போனது என, அழிவடைந்தது என அல்லது பழுதடைந்துள்ளது என தாம் திருப்தியடையும் வகையில் நிரூபிக்கப்படுகையில் உரிய நபருக்கு இணைப்பிரதி வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.<br>இந்த வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்ட நபர்களுக்கு மாத்தீரம் வழங்கப்படாதிருக்க வேண்டும் எனவும் இச்சந்தர்ப்பம் அனைத்து பொதுமக்களுக்கும் ஒரே சமமாக பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்பதுமான உங்கின் வழிகாட்டலினை நாட்டின் அடிப்படைச் சட்டத்திற்கு இணங்கிய வகையில் அவ்வாறே இருக்க வேண்டும் என்பதில் இணங்கிக் கொள்கிறேன். | காணப்படுகின்ற சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சவால்களுக்கு உள்ளாகியுள்ளது எனவும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் வழங்குகின்ற இதற்குச் சமமான சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரத்தின் இரண்டாம் பிரதிக்குப் பதிலாக மூலப் பிரதிகள் வழங்கப்படாமையும் ஆகிய விடயங்களின் காரணமாக இவ்வாறான இரண்டாம் பிரதிக்கும் பதிலாக மூலப் பிரதியினை வழங்கும் நடைமுறையானது நாட்டின் அடிப்படை சட்டங்களுக்கு இணங்க சட்டத்திற்கு முரணானது என அவதானனிக்கப்பட்டது. | | |
| (இ) | பதிவுசெய்தல் இலக்கம் 32 - XXXX இனைக் கொண்ட வாகனம் நீண்ட காலமாக வருமான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளாததன் காரணமாக டமீண்டும் கடந்த 20 ஆண்டுகளுக்காக வருமான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு 2023 யூலை 07 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் குருனாகல் மாகாண மோட்டார் வாகன திணைக்களத்திற்கு மோட்டார் வாகன ஆணையாளரின் உத்தியோகபூர்வ முத்திரையுடன் போலி ஆவணத்தை தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் மேற்கூறிய போலி ஆவணம் சம்பந்தமாக முறையான பரீட்சிப்பினை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக ஒரு புலனாய்வினை மேற்கொள்வதற்காக ஆணையாளருக்கு (புலான்ய்வு) அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | துரிதமாக உள்ளக பரீட்சிப்பினை மேற்கொண்டு உரியவாறு சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | CAW - XXXX பதிவு இலக்கத்தினைக் கொண்ட மோட்டார் வாகனம் அதன் பதிவுசெய்த உரிமையாளரினால் 2022 ஏபரல் 21 ஆந் திகதி கொகுவல, நுகேகொட பிரதேசத்தில் வசிக்கும் ஒரு நபருக்கு விற்கப்பட்டிருந்ததுடன் அனைத்து சட்டரீதியான ஆவணங்களும் அவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. வாகனத்தை கொள்வனவு செய்த நபர் இந்த வாகனத்தை மீண்டும் விற்பனை செய்வதற்காக கொகுவல பிரதேசத்திலுள்ள அவருக்குச் சொந்தமான வாகனம் விற்பனை செய்யும் இடத்தில் | இது தொடர்பாக புலனாய்வினை மேற்கொள்வதற்காக ஆணையாளருக்கு (புலனாய்வு) அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | துரிதமாக உள்ளக பரீட்சிப்பினை மேற்கொண்டு உரியவாறு சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுத்திவைத்திருந்தும் மாலபே வீதி பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் ஒரு பெண்ணினால் இந்த வாகனத்திற்கு சட்டத்திற்கு முரணாக இரண்டாம் பிரதியைப் பெற்று பின்னர் வாகனத்தை பதிவுசெய்யும் சான்றிதழினை இரண்டாம் பிரதியை மூலப் பிரதி என பரிமாற்றம் செய்து போலியாகத் தயாரித்த ஆவணங்களுடன் குத்தகை கம்பனியில் நிதி வசதியினைப் பெற்றிருந்த போதிலும் போலி ஆவணங்களைத் தயாரித்தமை சம்பந்தமாக முறையான பரிசீலனையை மேற்கொண்டு தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு தீர்வை வரியின்றி இறக்குமதி செய்த பதிவு இலக்கம் KA-XXXX இனைக் கொண்ட பதிவு செய்த ஜீப் வண்டி 2011 ஆம் ஆண்டின் போது டுபாய் நாட்டிற்கு மீள் ஏற்றுமதி செய்ததன் காரணமாக பதிவுசெய்தல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எனினும் மேற்கூறிய இரத்துச் செய்த இலக்கத்தினைப் பயன்படுத்தி ஜா-எல பிரதேசத்திலுள்ள ஒரு நபருக்கு மற்றுமொரு வாகனத்தின் செஸி இலக்கம் மற்றும் இன்ஜின் இலக்கம் உள்ளடக்கப்பட்டு மோட்டார் வாகனத்தினை பதிவு செய்து செல்லுபடியான பதிவுசெய்தல் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக முறையான பரிசீலினையை மேற்கொண்டு மோசடியாக செயற்பட்ட நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | துரிதமாக உள்ளக பரீட்சிப்பினை மேற்கொண்டு உரியவாறு சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 203 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஒரு மோட்டார் வாகனம், ஒரு மோட்டார் சைக்கிள் அல்லது அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படுகின்ற ஏதாவது ஒரு வாகனத்தின் மாற்றம் செய்ய முடியாத பிரதான பாகமாக வாகனத்தின் பதிவுசெய்த செஸி இலக்கம் ஒட்டப்பட்டுக் காணப்பட்டது. இதற்கிணங்க பதிவுசெய்த ஒரு | ஏற்றுக்கொள்கிறேன். | துரிதமாக உள்ளக பரீட்சிப்பினை மேற்கொண்டு உரியவாறு சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மோட்டார் வாகனத்தின் செஸி இலக்கத்தினை மாற்றம் செய்து முன்னைய பதிவினை பேண முடியாதிருந்த போதிலும் முறையான செல்லுபடியாகும் நடைமுறைச் சாத்தியமான காரணங்கள் இல்லாது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்த 237 ஆம் இலக்கம் தொடர்பான செஸி இலக்கத்தினை பேணுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. செஸி இலக்கத்தினை மாற்றிய மேற்கூறிய வாகனத்தின் முன்னைய செஸி இலக்கத்தின் கீழ் பல ஆண்டுகள் வருமான அனுமதிப் பத்திரம் பெற்றிருந்தமை மேற்கூறிய வாகனங்களின் சட்டரீதியான உரிமையானது 05 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையான சந்தர்ப்பங்களில் கைமாற்றம் செய்யப்பட்டிருந்தமை சில வாகனங்களுக்காக மோட்டார் வாகன பரிசோதகரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பாரச் சான்றிதழில் அடங்கியுள்ள தரவுகளுக்குப் பதிலாக ஏனைய தரவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தமை ஆகிய விடயங்களை கவனத்திற்கு எடுத்துக்கொண்ட போது மேற்கூறிய தரவு திருத்தங்களின் சட்டரீதியான தன்மையானது அதிக அளவில் சவாலுக்கு உட்படுகின்ற போதிலும் அது தொடர்பாக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் பணிப்புரையை அமுல்ப்படுத்தாமை சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | இலங்கை சுங்க திணைக்களத்தினால் விடுவிக்கப்படாத 07 வாகனங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்தல் மற்றும் அவை தொடர்பான கோவைகளை | இந்த மோட்டார் வாகனங்களுக்குரிய சுங்க கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளனவா என்பது இலங்கை சுங்கத்திடம் விசாரிக்கப்பட்டது. உரிய சுங்கவரி அறவிடப்படவில்லை என இலங்கை சுங்கத்தின் CUS/MV/RMV/02/2003 ஆம் இலக்க 2023-10-24 ஆந் திகதிய கடித்தின் மூலம் இத்திணைக்களத்திற்குத் | அரசாங்க கணக்குகள் தொடர்பாக குழுவின் பணிப்புரை அமுல்ப்படுத் தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணாமல் ஆக்கி மோசடி செய்தமை சம்பந்தமாக 2018 பெப்ரவரி 23 ஆந் திகதி அரசாங்க கணக்குகள் குழுவின் தீர்மானத்திற்கு இணங்க அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் உரிய உத்தியோகத்ரத்களுக்கு குற்றப் பத்திரம் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் குற்றம் செய்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுத்த ஒழுக்காற்று நடவடிக்கை கோவைகளும் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்படவில்லை | தெரியப்படுத்தப்பட்டது. இந்த மோட்டார் வாகனம் தொடர்பான மேலதிக பரீட்சிப்பிற்கான விபரம் சுங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த விடயங்களை புலனாய்வு செய்வதற்கும் அதனுடன் தொடர்புபட்ட பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அறிக்கையிடுவதற்குமாக எனனால் பதவிநிலை உத்தியோகத்தரின் தலைமைத்துவத்தில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதன் உப அறிக்கை தற்பொழுது கிடைத்துள்ளதுடன் அதில் குறிப்பிட்ட விடயங்களும் இறுதி அறிக்கையினை சமர்ப்பித்ததன் பின்னர் அதன் மூலம் அடையாளங்காணப்பட்டுள்ள பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன். | |
| (ii) | பதிவு இலக்க தகட்டினை மீளப்பெற்று மேற்கூறிய வாகனம் பெருந்தெருக்களில் ஓடுவதனைத் தவிர்ப்பதற்கு மேற்கூறிய வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்கு, ஒப்படைக்க முடியாதவையாக எதிர்ப்பினை கோவை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க கணக்குகள் குழுவின் விசாரணைகக்கு உட்பட்ட மேற்கூறிய 07 வாகனங்கள் சம்பந்தமாக ஒப்படைப்பு தடைகள் வழங்கப்பட்டிருந்தும் மற்றும் நிறுவன மட்டத்தில் பரீட்சிப்பும் மேற்கொண்டிருந்த அதேவேளை அவற்றில் ஒரு வாகனத்தை 2021 எப்ரல் 04 ஆந் திகதி மற்றுமொரு நபருக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிரந்ததுடன் அரசாங்க கணக்ககள் குழு பணிப்புரைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது இந்த வாகங்களை ஒப்படைப்பதற்கு முடியாத வகையில் எதிர்ப்பு கோவை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே மேற்கூறிய (i) ஆம் பந்தியில் குறிப்பிட்ட குழுவின் அறிக்கையின் சிபாரிசில் குறிப்பிடப்பட்ட உரிய வாகனப் பதிவினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அரசாங்க கணக்ககள் தொடர்பாக குழுவின் பணிப்புரை அமுல்ப்படுத் தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | சட்டரீதியான சுங்கத்தீர்வைகள் செலுத்தப்படாது இலங்கை சுங்கத் திணைக்களத்தின் மூலம் விடுவிக்கப்படாத மற்றும் மோசடியாக இறக்கமதி செய்யப்பட்ட 02 அதிசொகுசு மோட்டார் வாகனங்கள் மற்றும் 04 மோட்டார் சைக்கிள்கள் சுங்க திணைக்களத்தில் இதுவரை விடுவிக்கப்படாத கொல்கலன்களுக்குரிய CBHQ 1 498224 ஆம் இலக்க முழுமையாக விடுவிக்கப்படாத சுங்க குறிப்பேட்டினைப் பயன்படுத்தி பொய்யான ஆவணங்களை சமர்ப்பித்து மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்தல் மற்றும் பதிவுசெய்வதற்கு முயற்சி செய்தல் சம்பந்தமாக சுங்க திணைக்களத்துடன் ஒன்றிணைந்த பரீட்சிப்பினை மேற்கொண்டு மேற்கூறிய சட்டத்துக்கு முரணான பதிவுசெய்தலினை இரத்துச் செய்து நிர்ணயிக்கப்பட்ட சுங்க வரியினை அறவீடு செய்வதற்கும் சட்டரீதியாக முயற்சி எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக புலனாய்வு செய்வதற்காக பதிவிநிலை உத்தியோகத்தரின் தலைமையிலான ஒரு குழுவின் மூலம் புலனாய்வு மேற்கொள்ளப்படுவதுடன் அதன் உப அறிக்கை தற்பொழுது எனக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் இறுதி அறிக்கையின் அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இது சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகருக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | துரிதமாக உள்ள பரீட்சிப்பினை மேற்கொண்டு தாபனவிதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | ஈ மோடரிங் செயற்திட்டம் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (i) ஈ மோடரிங் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துதல் மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைக் கட்டணங்களை திருத்தம் செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞாபனம் மற்றும் அது தொடர்பாக அமைச்சரவை நியமித்த உத்தியோகத்தர் குழு அறிக்கைக்காக வழங்கப்பட்டுள்ள அமைப/23/0952/608/011-1 ஆம் இலக்க 2023 யூன் 13 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்ட 3(1) மற்றும் | இது சம்பந்தமான பெறுகை நடைமுறை மற்றும் ஏனைய நடவடிக்கைகள் கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படுவதுடன் உரிய கட்டிடத்தினை வாடகைக்குப் பெற்றுக்கொள்வது தொடர்பாக இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. | உடன்படிக்கை செய்த வழங்கனருடன் ஈமோடரிங் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவது சம்பந்தமாக அமைச்சரவையிடமிருந்து உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 3(2) பிரேரணைகள் சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை முடிவுறுத்தாது உடன்படிக்கை செய்த வழங்குனருடன் ஈ - மோடரிங் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றதா அதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படுமாகவிருந்தால் ஒரு கொடுக்கல் வாங்கல்கலுக்காக செலுத்திய கட்டணம் எவ்வளவு என்பது தொடர்பான உறுதியான இணக்கப்பாடு இன்றி ஈ- மோடரிங் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக கங்காராம விகாரை யில் ஒரு சதுர அடி ரூபா 98 வீதம் 10,000 சதுர அடியினை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இது சம்பந்தமாக இறுதித் திர்மானம் எடுக்கப்படவில்லை என மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டது. | | |
| (ii) | ஈ - மொடரிங் செயற்திட்டத்தினை அமுல்ப்டுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டின் போது மெட்ரோபொலிடன் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளதுடன் உடன்படிக்கைக்கு இணங்க ஒரு கோவைக்கு ரூபா 187.97 ஆன போதிலும் தற்பொழுது வரை ஒரு கோவைக்கு செலுத்தப்படுகின்ற ரூபா 187.97 இற்கு மேலதிகமாக இன்னும் ரூபா 646 வீதம் (ஒரு மாதத்திற்கு 60,000 பதிவு செய்தலாக கருதி 05 ஆண்டுகளுக்காக ) ரூபா 2,325,600,000 (646X 60000X | ஈ - மோடரிங் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக ஒரு கோவைக்கு ரூபா 187.97 இற்கு மேலதிகமாக கட்டிடத்தின் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான செலவுகள் இதுவரை மதிப்பீடு செய்யப்படவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு மற்றும் அமைச்சரவை திர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 12X5) செலுத்தி உடன்படிக்கை செய்த நிறுவனத்துடன் செயற்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்ற போதிலும் மேற்கூறிய தீர்மானம் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கும் அமைச்சரவை தீர்மானத்திற்கும் இணக்கமற்றது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இது சம்பந்தமாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு தெரியப்படுத்தப்பட்டது. | | |
| (ஒ) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மாத்தறை கிளையில் சாரதி அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் நடைமுறை மற்றும் வழக்கமான நிருவாக நடவடிக்கைகள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | |
| | (i) | சாரதி அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்காக சித்தியடைய வேண்டிய எழுத்துமூல பரீட்சைக்காக பட்டியல்படுத்தப்படாத 18 விண்ணப்பதாரர்கள் மற்றும் எழுத்துமூல பரீட்சை திகதியில் பங்குபற்றாமையின் காரணமாக பரீட்சை குறிப்பு பதிவேட்டில் சமூகமளிக்கவில்லை என பதியப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் என போலியான பெறுபேற்றினை உள்ளடக்கியும் எழுத்துமூல பரீட்சையின் போது எந்த புள்ளியையும் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் என | மேற்கூறிய அவதானிப்புடன் இணங்கிகுகிறேன். மாத்தறை அலுவலகத்தில் பிரதான மோட்டார் வாகன பரீட்சகரினூடாக இது தொடர்பான புலனாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் சந்தேகத்திற்குரிய மற்றும் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பான அனைத்து கோவைகளும் அவர்களால் பரீட்சிக்கப்பட்டது. அதற்கிணங்க உரிய ஒழுங்கீனத்துடன் தொடர்புபட்ட அலுவலக உத்தியோகத்தரின் சேவை இடைநிறுத்தி வைக்கப்பட்டது. இது தொடர்பான புலனாய்வு இன்னும் இடம்பெற்று வருகின்றது. | துரிதமாக உள்ள பரீட்சிப்பினை மேற்கொண்டு தாபன விதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போலியான பெறுபேற்றினை உள்ளடக்கியும் பதிவேட்டினை நாளதுவரயையாக்கி செயன்முறைப் பரீட்சைக்கு அனுப்புவதற்கும் செயன்முறைப் பரீட்சையின் இறுதியில் செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தினை வழங்கவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | சாரதி அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்காக சித்தியடைய வேண்டிய செயன்முறைப் பரீட்சைக்கு பயட்டியல்படுத்தப்படாத 10 விண்ணப்பதாரர்கள் மற்றும் செயன்முறைப் பரீட்சைக் சமூகமளித்திருக்காததன் காரணமாக பெறுபேற்று பதிவேட்டில் சமூகமளிக்கவில்லை என பதியப்பட்டுள்ள ஒரு விண்ணப்பதாரர், செயன்முறைப் பரீட்சை பதிவேட்டில் உரிய பரீட்சையில் சித்தியடையவிலை என தகவல் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு உத்தியோகத்தர் மற்றும் செயன்முறைப் பரீட்சை பதிவேட்டில் எந்தக் குறிப்பும் உள்ளடக்கப்படாத ஐந்து விண்ணப்பதாரர்களுக்கு செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள் என போலியான தரவுகளை உள்ளடக்கி செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | துரிதமாக உள்ள பரீட்சிப்பினை மேற்கொண்டு தாபன கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | சாரதி அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்காக தேவையான எழுத்துமூல பரீட்சைக்கு தோற்றியிருக்காத எனினும் எழுத்துமூல பரீட்சை நடைபெற்ற திகதியில் அத்திகதியில் பயன்படத்தப்படாத பரீட்சை இலக்கங்களையும் போலியான பெறுபேற்றினையும் | -மேற்படி- | துரிதமாக உள்ள பரீட்சிப்பினை மேற்கொண்டு தாபன விதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கி ஒரு விண்ணப்பதாரருக்கு செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன் எழுத்துமூல பரீட்சை, செயன்முறை பரீட்சை ஆகிய இரண்டு பரீட்சைகளுக்கும் தோற்றியிருக்காதிருந்தும் றேம்கூறிய பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளார்கள் என போலியான தகவல்களை உள்ளடக்கி சாரதி அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஓ) | இராணுவ படையினால் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட வாகனங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்திருந்தமை சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 203 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் வாகனங்களை புதிதாக பதிவுசெய்வதற்காக MT - 2 படிவத்துடன் வாகனத்தை சுங்கத்திலிருந்து விடுவிக்கும் போது வழங்கப்பட்ட ஆவணங்கள், சுங்க கட்டணத்தை செலுத்திய பற்றுசீட்டின் மூலப்பிரதி மற்றும் புதிதாகஉற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் வாகனமாயின் உரிய இன்வொயிஸ் போன்ற வாகனத்திற்குரிய மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விசேட நிறுவனங்களுக்கு அல்லது விசேட நபர்களுக்கு மேற்கூறிய ஆவணங்கள் இன்றி வாகனங்களை புதிதாக பதிவுசெய்வதற்காக மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 203 ஆம் அத்தியாயத்தில் ஏற்பாடு | முப்படைகளின் மோட்டார் வாகனங்கள் பெருந்தெருக்களில் ஓடுவதற்காக முப்படைகளை அடையாளப்படுத்தும் தொகுதி இலக்கத்துடன் ஒரு இலக்கத்தினைப் பயன்படுத்துவதற்கு மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க பொதுவாக உள்நாட்டில் பயன்படுத்துகின்ற வாகன பதிவுசெய்தலுக்கான ஒழுங்குவிதியானது மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 203 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் விசேட நிறுவனங்களுக்கு (முப்படைகள்) மற்றும் விசேட நபர்களுக்காக (சனாதிபதி, பிரதம மந்திரி) மேற்கூறிய ஒழுங்குவிதிகளுக்குப் புறம்பாக மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 238 ஆம் அத்தியாயத்தின் பிரகாரமான ஏற்பாடுகளை ஈடுபடுத்தி மோட்டார் வாகனங்களை பதிவு செய்து பயன்படுத்தும் இயலுமை உள்ளது. அதற்கிணங்க முப்படைகளால் விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் தனிப்பட்டவர்களின் கைகளுக்கு கிடைக்கையில் அந்த வாகனங்களை மோட்டார் வாகன அதிகாரச் | மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் பிரகாரமான ஏற்பாடுகளுக் கு இணங்க நடவடிக்கை எடுப்பதாக இருந்த போதிலும் இறக்குமதி செய்த ஆவணங்களு ம் தொடர்புபட்ட ஆவணங்களு ம் சமர்ப்பிக்கப்ப ட வேண்டும் என்பதனால் அதற்கு இணங்க |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்படவில்லை. எனினும் முன் பதிவுகள் இல்லாது முப்படைகள் பயன்படுத்தி கேள்வி நடைமுறைகளின் பின்னர் சிவில் நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள 63 வாகனங்கள் அதிகாரச் சட்டத்தின் 203 ஆம் அத்தியாயத்திற்கு இணக்கமற்ற வகையில் மேற்கூறிய அடிப்படை நடைமுறைகளின்றி 325 இலக்க தொகுதியின் கீழ் பதிவு செய்து உரிய சிவில் நபர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் 203 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் வாகனங்கள் பதிவு செய்தல்களாக MTA - 02 உடன் அல்லாது வாகனத்தின் உரிமையை மாற்றுதல்/ ஒப்படைத்தலாக வாகனத்தை ஒப்படைக்கும் போது பயன்படுத்துகின்ற MTA - 06 மற்றும் MTA - 08 உடன் ஏனைய துணை ஆவணங்களை சமர்ப்பித்ததன் பின்னர் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க வாகனங்களை ஒப்படைக்கும் போது வாகனங்களை சுங்கத்திலிருந்து விடுவிக்கையில் வழங்கப்படுகின்ற ஆவணங்கள், சுங்க கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுக்கள் மற்றும் உரிய இன்வொயிஸ்களைச் சமர்ப்பித்தல் அத்தியவசியமற்றது என தயவாக தெரிவிக்கிறேன். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | முப்படைகளினால் காலத்துக்குகாலம் கேள்வி கோரி விற்பனை செய்கின்ற வாகனங்கள் தொடர்பான விபரம் பொறுப்புக்கூற வேண்டிய பிரதான உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிப்பதுடன் ஒரு சிவில் நபர் முப்படைகளிலிருந்து கொள்வனவு செய்த ஒரு வாகனமாக பதிவுசெய்வதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட வாகனத்தின் விபரம் மேற்கூறிய கேள்வி கோரி விற்பனை செய்த வாகனம் தொடர்பான விபரத்துடன் பரீட்சித்து மேற்கூறிய வாகனம் முப்படைகளால் கேள்வி கோரி விற்பனை செய்த வாகனமா என்பது சான்றுபடுத்தப்படுகின்ற து. எனினும் மோட்டார் வாகன போக்குவரத்து | பதிவுசெய்தல் இலக்கங்களுக்குரிய இத்திணைக்களத்தின் கணனி விபரத்தின் பிரகாரம் இந்த அனைத்து மோட்டார் வாகனங்களும் இராணுவம், ஆகாய மற்றும் கடற்படைகள் முதலாவது பதிவுசெய்த உரிமையாளராக குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க இந்த மோட்டார் வாகனங்கள் இராணுவ விமான மற்றும் கடற்படைகளின் மூலம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் என தொடக்கமாக இணங்காணலாம்.<br>2011 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை இராணுவ விமான மற்றும் கடற்படைகளின் மூலம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை பதிவு செய்வதற்கு முன்னர் உள்ளக கணக்காய்வப் பிரிவின் மூலம் உரிய படைத் தொகுதியிடம் விசாரித்து தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் இடம்பெறுகின்றது. அதற்கிணங்க இந்த மோட்டார் வாகனங்களை பதிவு செய்வதற்கு முன்னர் இராணுவ விமான மற்றும் கடற்படையின் மூலம் கேள்வி கோரி விற்கப்பட்டது என்ற உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டது என தயவாக தெரிவிக்கிறேன். | துரிதமாக உள்ளக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு தாபன விதிக்கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் கோவைகளுக்கு இணங்க முப்படைகளால் அனுப்பிவைத்துள்ள கேள்வி கோரல் விபரத்தடன் பொருந்தியிருக்காத மற்றும் கேள்வி விபரங்களின் மூலம் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருக்குத் தெரியப்படுத்தாத முப்படைகளின் 40 வாகனங்கள் 325 இலக்க தொகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய வாகனங்களின் பதிவுசெய்தல் தவல்களை உள்ளடக்கிய தொடக்க கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (iii) | முப்படைகளின் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களின் கையொப்பத்தோடு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களில் குறிப்பிட்ட 08 வாகனங்கள் தொடர்பாக கேள்வி கோரப்பட்ட திகதிக்கு முன்னைய திகளிகளின் போது மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்து சிவில் நபர்களுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருந்தது. இதற்கிணங்க முப்படைகளின் ஏல விற்பனைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனமாக ஏனைய வாகனங்களும் பதிவுசெய்யப்படும் ஆபத்து உருவாகியிருந்தது. | இலங்கை இராணுவ, விமான மற்றும் கடற்படைகளின் மூலம் மோட்டார் வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்து வழங்குகின்ற ஆவணங்களில் அந்த மோட்டார் வாகனம் இராணுவப்படைக்கு பயன்பாட்டிற்காக எடுத்த திகதியை உள்ளடக்கிய தகவல்களைக் கொண்ட ஆவணம் வழங்கப்படுகின்றது. அந்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு பதிவுசெய்தலுக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் இடம்பெறுகின்றது. அதன் போது இராணுவப் படை பயன்பாட்டிற்காக ஈடுபடுத்திய திகதி அல்லது இராணுவப் படையின் மூலம் கேள்வி கோரி விற்கப்பட்ட திகதி அல்லது இந்த வாகனத்தை பரீட்சித்து பாரச் சான்றிதழ் (CMT 75) வழங்கிய திகதி முதலாவது பதிவுசெய்த திகதியாகக் கருதப்படுகின்றது. மேலும் 325 ஆம் இலக்க தொகுதியினை வழங்குவதற்கான தரவுகளை உள்ளடக்குகையில் பதிவுசெய்தல் திகதியாக தரவுகள் உள்ளடக்கப்படுகின்ற திகதி கணனியின் மூலம் தானாகவே (Auto) பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இத்திகதியானது தரவுகள் Confirm செய்த பின்னர் பதிவு செய்தல் சான்றிதழினை அச்சிடுவதற்கு முன்னர் மாற்றம் செய்யலாம். அச்செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு மறதி ஏற்பட்டிருக்குமாயின் கணக்காய்வு ஐயவினாவின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு | துரிதமாக உள்ளக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு தாபன விதிக்கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திகதிகளில் வித்தியாசங்கள் காணப்படலாம். இதற்கிணங்க கணக்காய்வின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு தவறு இடம்பெற்றுள்ளதற்கான காரணம் உரிய திகதிகளில் சரியாக தரவுகளை உள்ளடக்குவதற்காக ஈடுபடுத்தாமை என தெரிகின்றது. இத்தவறினை சரிசெய்வதற்கான அனைத்து முயற்சிகளும் எப்போதும் எடுக்கப்படுகின்றது என குறிப்பிடுகிறேன். இதற்கிணங்க 325 ஆம் இலக்க தொகுதியை வழங்கும் போது தொடக்க பதிவுசெய்தல் திகதியை தெரிவுசெய்தலானது சிக்கலான நிலைமைக்கு மாறியுள்ளது. இதனால் தொடக்க பதிவுசெய்தல் திகதிக்கும் ஒப்படைத்தல் திகதிக்குமிடையே வித்தியாசத்தினைக் காணலாம். கணக்காய்வின் மூலம் காட்டப்பட்டுள்ள இப்பிழையை சரிசெய்வதற்காக அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய 3/2024 ஆம் இலக்க 2024-03-12 ஆந் திகதிய உள்ளக சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது. | |
| (iv) | முப்படைகளால் முன்னைய பதிவின்றி பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் கேள்வி நடைமுறையின் பின்னர் சிவில் நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தும் அந்த வாகனங்கள் கேள்வி கோரப்பட்ட திகதிக்கு முன்னைய திகதிகளின் போது மேற்கூறிய வாகனங்களின் தொடக்க பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என நிரூபிக்கப்படும் வகையில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமைக்கு போலியான தரவுகளை உள்ளடக்கி முப்படைகளால் கேள்வி கோரப்பட்ட 29 வாகனங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன. | -மேற்படி- | துரிதமாக உள்ளக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு தாபன விதிக்கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | முப்படைகளால் கேள்வி கோரப்பட்ட வாகனங்களின் செஸி இலக்கத்தினை பரீட்சித்த போது முப்படைகளால் | பழைய எண் தொகுதியின் கீழ் உழவு இயந்திரம் இழுவை பெட்டி, கை உழவு இயந்திரம் ஏனைய நில வாகனங்களைப் பதிவு செய்யும் போது முழுமையான செஸி இலக்கம் பயன்படுத்துவதில்லை என | துரிதமாக உள்ளக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு |

| | | | |
|---|---|---|---|
| | தனிப்பட்டவர்களுக்கு கைமாற்றப்பட்டுள்ள 04 செஸி இலக்கங்களுக்காக அச்செஸி இலக்கத்திலேயே பல வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த ன. அதற்கிணங்க ஒரே இலக்கத்தில் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தமை, சரியான செஸி இலக்கம் மற்றும் போலியான செஸி இலக்கம் என்பதனை அடையாளங்காணுதல், முப்படைகளால் கேள்வி கோரப்பட்ட வாகனங்களை உறுதிப்படுத்துதல் என்பவற்றிற்காக பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான பரீட்சிப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை | அவதானிக்கப்பட்டது. எனவே செஸி இலக்கத்தின் தொகுதியில் ஒரு பகுதி நீக்கப்பட்டு இலக்கத்தில் ஒரு பகுதி மாத்திரம் பயன்படுத்தப்பட்டு பொதுவாக பதிவுசெய்தல் இடம்பெற்றுள்ளது. இந்த இலக்கத்தின் பகுதியானது நான்கு இலக்கங்கள் அல்லது ஐந்து இலக்கங்களைக் கொண்டதாகும். ஒரு தொகுதியின் கீழ் 9500 அளவிலான மோட்டார் வாகனங்கள் (மொத்தம் 13 இனை தவிர்த்து) பதிவு செய்யப்படுவதனால் இந்த நான்கு இலக்கங்கள் போதுமானதல்ல அதனால் ஒரே செஸி இலக்கத்தில் பல நில வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கலாம். கணனியின் உதவியின்றி மோட்டார் வாகனங்களை பதிவுசெய்த காலத்தில் இவ்வாறு ஒரு செஸி இலக்கத்தின் கீழ் பல மோட்டார் வாகனங்கள் பதிவுசெய்யக்கூடியதாகக் காணப்பட்டது. அதற்கிணங்க இவ்வாறு ஒரே செஸி இலக்கத்தில் கை உழவு இயந்திரம் அல்லது உழவு இயந்திரம் இழுவை பெட்டிகள் சில பதிவு செய்யப்பட்டிருத்தல் வழக்கமானதாகும். எனினும் நிகழ்காலத்தில் ஆங்கில எழுத்துக்களை பதிவுசெய்யும் போது இவ்வாறான பிழைகள் ஏற்படமாட்டாது. | தாபன விதிக்கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | அரசாங்க நிறுவனங்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள், முப்படைகள் அல்லது நிதி நநிறுவனங்களினால் ஏதாவது ஒரு பதிவுசெய்த வாகனத்தினை எச்சப்பொருளாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் போது நீக்கப்படும் வாகனத்தின் பதிவுசெய்த சான்றிதழினை மோசடியான செயற்பாடுகளுக்கு தொடர்புபடுத்துவதனைத் தவிர்ப்பதற்காக அனைத்து வாகன எச்சங்களும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்தலினை இரத்துச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென தேவையான சட்டரீதியான மற்றும் செயன்முறையான ஒரு கட்டமைப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முப்படைகளின் மூலம் எச்சப் பொருளாக விற்கப்பட்ட வாகனங்களுக்காக ஒரு மோட்டார் வாகனமாக விற்கப்பட்டது என்ற உறுதிப்படுத்தல் இத்திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் இடம்பெறுவதில்லை. கணக்காய்வின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற விடயங்களின் பிரகாரம் இவ்வாறு எச்சப்பொருளாக விற்கப்பட்டுள்ள வாகனங்களின் செஸி இலக்கத்திற்கு இத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கலாம் என ஏற்றுக்கொள்கிறேன். எவ்வாறாயினும் உங்களின் அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொண்டு இதற்கு தேவையான சட்டரீதியான மற்றும் நடைமுறை ரீதியான கட்டமைப்பினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பதிவு செய்த வாகனத்தை எச்சப் பொருளாக நிக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் போது நீக்கப்படுகின்ற வாகனத்தின் பதிவினை இரத்துச்செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கு முழுமையான இலத்திரனியல் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் சுற்றறிக்கையின் பிரகாரம் | | |

| | | | |
|---|---|---|---|
| வழங்கிய அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களைப் பதிவுசெய்வது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | |
| (i) | தொழில்லாளர்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு வழங்கிய 02/2022 ஆம் இலக்க பிரதான சுற்றறிக்கையின் 5.3 ஆம் பந்தி மற்றும் 02/2022 (i) ஆம் இலக்க 2022-09-09 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு வெளிநாட்டில் பயன்படுத்தப்படாத அல்லது மைலோ மீற்றர் பூச்சியமான மற்றும் உற்பத்தி திகதியிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்குள் என்ற நிபந்தனையை பூரணப்படுத்திய வாகனம் மாத்திரம் இறக்குமதி செய்யப்படுதல் வேண்டும். வாகன இறக்குமதியின் போது அதேபோல வாகனத்தை பதிவு செய்தலின் போது மேற்கூறிய நிபந்தனை பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கு உற்பத்தியாளரின் சான்றிதழ், ஒரு வெளிநாட்டில் பதிவுசெய்த சான்றிதழ், இறக்குமதிக்கு முன்னைய பொருள் பரீட்சிப்பு தொடர்பான ஆவணம் போன்ற விடயத்திற்குரிய பதிவேட்டின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான தேவைப்பாடு மூலம் மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கை தேவைப்பாடு பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்படாதிருந்தும் அனுமதிப்பத்திரத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட 05 சந்தர்ப்பங்களின் போது தீர்வை நிவாரணத்தின் அடிப்படையில் மேற்கூறிய வாகனங்களை விடுவிப்பதற்கு | ஒரு மோட்டார் வாகனத்தை பதிவுசெய்வதற்காக இலங்கை சுங்கத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள CUSTOM 53, ASSESMENT NOTICE மற்றும் இலங்கை சுங்கத்தின் மூலம் இத்திணைக்களத்திற்கு பரிமாற்றம் செய்யப்படுகின்ற மோட்டார் வாகனத்திற்குரிய தகவல்கள் பிரதானமானதாகும். உரிய மோட்டார் வாகனத்தை இறக்குமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்குமாக இருந்தால் அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளும் முக்கியத்துவமானதாகு ம். கணக்காய்வு ஐய வினாவின் மூலம் குறிப்பிட்டுள்ளவாறு வாகனங்களை இறக்குமதி செய்யும் போது அல்லது வாகனங்களை பதிவு செய்யும் போது நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கு உற்பத்தியாளரின் சான்றிதழ் பெற்றரியினை அப்புறப்படுத்தும் பொறுப்பினை அதிகாரம் பெற்ற முகவர் பொறுப்பேற்றல் முதலிய பொறுப்புக்கள் சம்பந்தமாக மோட்டார் வாகன இறக்குமதியின் போது இலங்கை சுங்கத்தினால் பரீட்சிக்கப்பட வேண்டிய செயற்பாடு என குறிப்பிடுகிறேன். இந்த ஆவணம் இத்திணைக்களத்தில் பதிவுசெய்தல் நடவடிக்கைகளுக்காகச் சமர்ப்பித்தல் இடம்பெறவில்லை எனவும் மேலும் தயவாக தெரிவிக்கிறேன். | சுங்க குறிப்பேட்டிற்கு மேலதிகமாக ஏனைய இறக்குமதி ஆவணங்களுடன் ஒப்பீடு செய்து பயன்படுத்தப் படாத வாகனமா என்பதனை உறுதி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதேபோல முறைப்படியாக ஆவணப்படுத்தப்பட்ட உறுதிப்படுத்தலின்றி சுங்க குறிப்பேட்டில் ‘‘பயன்படுத்தப்படாத’’ வாகனம் என குறிப்பிடுவதற்கு சுங்கம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் சுங்க குறிப்பேட்டிற்கு மேலதிகமாக ஏனைய இறக்கமதி சார்ந்த ஆவணங்கள் எதுவும் இல்லாது மேற்கூறிய வாகனம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிரந்தது. ரு | | |
| (ii) | வாகன இறக்குமதியின் போது பூரணப்படுத்த வேண்டிய வரையறைகளாக 02/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்ததியில் பெற்றரி மற்றும் மின்சார மோட்டாருக்காக ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்காக உற்பத்தியாளரின் அல்லது ஏற்றுமதியாளரின் உத்தரவாதம் இருக்க வேண்டுமென காட்டப்பட்டுள்ளதுடன் சுற்றறிக்கையின் 5.4 ஆம் பந்தியில் ஒரு வலு உந்துதலில் ஆகக் குறைந்தது இருநூறு கிலோ மீற்றர்களுக்கு மேல் ஓடக்கூடியதாக இருக்கவேண்டுமெனக் காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் மேற்கூறிய வரையறைகள் பூரணப்படுத்தப்பட்டது என்பதற்கு உற்பத்தியளரின் அல்லது ஏற்றுமதியாளரின் ஏற்றுக்கொள்ளக்கூடிய உறுதிப்படுத்தலுடன் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்படாது மேற்கூறிய வாகனம் இறக்குமதி | இந்த மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்காக தொழிலாளர்கள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்வதற்கு முன்னர் இறக்குமதிக்கான அனுமதிப்பத்திர நிபந்தனைகளுக்குரிய ஆவணங்களின் பரீட்சிப்பானது உரிய சுங்க வரியை அறவீடு செய்வதற்கு முன்னர் சுங்கத்தின் கடமை எனவும் சுங்கத்தின் மூலம் வழங்கப்படுகின்ற CUSTOM 53 இனை அடிப்படையாகக் கொண்டும் தேவைப்படுகின்ற ஏனைய ஆவணங்களைப் பொறுப்பேற்று பதிவுசெய்தல் மேற்கொள்ளப்படுகின்றது என குறிப்பிடுகிறேன். | உள்ளக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறி நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டுள்ளதுடன் சுற்றறிக்கைத் தேவைப்பாடுகள் உறுதிப்படுத்தப்படுகின்றன என்பதற்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளாது அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்த 108 வாகனங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன. | | |
| (iii) | தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் 02/2022 (iii) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தி மற்றும் 02/2022 (iv) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2022-05-17 ஆந் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்ட அனைத்து அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். எனினும் சுற்றிக்கையில் குறிப்பிட்ட பதிவுசெய்யக்கூடிய இறுதித் திகதியின் பின்னர் சுற்றறிக்கையினை வழங்கிய அதிகாரி நிறுவனத்தின் அனுமதி அல்லது அங்கீகாரமின்றி அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்த இரண்டு வாகனங்களை பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பதிவு இலக்கம் CBM -XXXX இனைக் கொண்ட மேடாட்டார் வாகனம் இலங்கை சுங்கத்தின் மூலம் 2023-11-09 ஆந் திகதி விடுவிக்கப்பட்டுள்ளது என சுங்க ஆவணங்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்படுகின்றது. அதற்கிணங்க பதிவுசெய்தல் இடம்பெற்றுள்ளது. அவ்வாறே CBM-XXXX இலக்க மோட்டார் வாகனம் 2023-05-24 ஆந் திகதி இலங்கை சுங்கத்தின் மூலம் விடுவிக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க அந்த சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய காலத்திற்குள் இந்த 02 மோட்டார் வாகனங்கள் பதிவுசெய்யப்படவில்லை என ஏற்றுக்கொள்வதுடன் அது சுற்றறிக்கையை சரியாக பயன்படுத்தாமையினால் ஏற்பட்டது என தயவாக குறிப்பிடுகிறேன். | உள்ளக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறி நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | சுங்க வரி இறக்குமதி அனுமதிப்பத்திர முறைமையின் கீழ் வெளிநாடு சென்ற தொழிலாளர்களினால் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்கள் உரிய வெளிநாடு சென்ற | இணங்கிக் கொள்கிறேன். உரிய உத்தியோகத்தர் இது சம்பந்தமாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மூலம் வழங்கியுள்ள சுற்றறிக்கையினை முறையாக பயன்படுத்தாமையின் காரணமாக இந்த ஒப்படைப்பு இடம்பெற்றுள்ளது. அவ்வாறான | துரிதமாக உள்ளக பரீட்சிப்பினை மேற்கொண்டு தாபனவிதிக் கோவையின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்லாளரின் பெயரில் பதிவுசெய்யப்பட வேண்டியதுடன் 02/2022 (iii) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.4 ஆம் பந்தியின் பிரகாரம் இரண்டு ஆண்டுகள் முடியும் வரை உரிமையை மாற்றம் செய்யமுடியாது. எனினும் சுற்றக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் இறக்குமதி செய்த 06 வாகனங்களில் ஒரு வாகனம் தொடக்க பதிவு செய்த திகதியிலேயே மற்றும் ஒரு வாகனம் தொடக்க பதிவுசெய்த திகதியிலிருந்து 05 நாட்கள் கடந்ததன் பின்னர் மோசடியாக வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பிழைகள் எதிர்காலத்தில் இடம்பெறாமைக்காக துரிதமாக உரிய பிரிவிற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்குத் தெரியப்படுத்தி தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடுகிறேன். மேலும் இந்த மோட்டார் வாகனத்தை இறக்குமதி செய்வது சம்பந்தமாக இலங்கை சுங்கத்தின் மூலம் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் தெரிவிப்பதுடன் தொடக்க கோவை இலங்கை சுங்கத்தினால் கேட்டு இத்திணைக்களத்திடமிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது எனவும் தயவாக தெரிவிக்கிறேன். | ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் 02/2022(i) மற்றும் 02/2022(iii) ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2022 செப்தெம்பர் 09 ஆந் திகதியிலிருந்து 2023 மார்ச் 21 ஆந் திகதி வரை அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனத்தின் CIF பெறுமதியில் 10 சதவீத பெறுமதியினை அமெரிக்க டொலர்களில் செலுத்தியதன் பின்னர் தரப்பினர்களுக்கு ஒப்படைப்பு செய்யலாம் என ஏற்பாடு உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறிய ஒப்படைப்பிற்கு இருந்த ஏற்பாடு 2023 மார்ச் 21 ஆந் திகதியில் முடிவடைந்திருந்தது. எனினும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் சுற்றறிக்கை உள்ளடக்கம் அமுலுக்குவராத திகதியான 2023 மார்ச் 22 ஆந் திகதி அனுமதிப்பத்திர முறைமையின் | பதிவு இலக்கம் CBM-XXXX இற்குரிய மோட்டார் வாகனம் 2023-02-28 ஆந் திகதி இலங்கை சுங்கத்தின் மூலம் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் பதிவுசெய்தல் 2023-03-17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டது. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டுள்ள வாகனம் 2023-09-30 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் CIF பெறுமதியில் 10% இனை அறவிட்டு ஒப்படைப்பினை மேற்கொள்வதற்கு உள்ள இயலுமை 2023-03--21 ஆந் திகதியில் முடிவடைந்துள்ளது என 2023-03-21 ஆந் திகதி வழங்கியுள்ள 02/2022 (iii) ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும் இச்சுற்றறிக்கையின் ஏற்பாடு 2023-03-22 ஆந் திகதி வரை இத்திணைக்களத்திற்கு அறிவிக்கப்படாமையின் காரணமாக இந்த ஒப்படைப்பு இடம்பெற்றுள்ளது என குறிப்பிடுகிறேன். இந்த ஒப்படைப்பிற்குரிய CIF பெறுமதியின் 10% ஆன ரூபா 898,978 பணம் செலுத்தப்பட்டுள்ளது. | துரிதமாக உள்ளக பரீட்சிப்பினை மேற்கொண்டு தாபனவிதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கீழ் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு வாகனம் CIF பெறுமதியில் 10 சதவீத்திற்கும் சமமான ரூபா பெறுமதியினை செலுத்தியதன் பின்னர் மற்றுமொரு தரப்பினருக்கு உரிமையை மாற்றிக்கொடுப்பதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். | | |
| | (vi) | மேலுள்ள திட்டத்தின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வதற்குரிய அரசாங்க வரியை உள்ளடக்கிய அனைத்து செலவுகளையும் திர்த்துவைப்பதற்காக முறைப்படியாக வங்கி முறைமையினூடாக அனுப்பிவைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் இறக்குமதி செய்யப்பட்ட வாகனத்திற்காக குத்தகை வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு சுற்றறிக்கையின் மூலம் ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் இறக்குமதி செய்யயப்பட்ட ஒரு வாகனம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்து 2023-10-27 ஆந் திகதி வாகனத்தின் பூரண உரிமை நிதிக்கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டு குத்தகை வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | இது சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள 02/2022, 02/2022(i), 02/2022(iii) மற்றும் 02/2022(iv) ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாது என்பதற்கு எந்தக் குறிப்பும் இல்லை என தயவாக தெரிவிக்கிறேன். எனினும் கணக்காய்வின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு தற்பொழுது பதிவுசெய்கின்ற மோட்டார் வாகனங்களுக்கான நிதி வசதிகளை பதிசெய்தல் இடம்பெறுவதில்லை எனத் தெரிவிக்கிறேன். | துரிதமாக உள்ளக பரீட்சிப்பினை மேற்கொண்டு தாபனவிதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | | சாரதி அனுமததிப்பத்திரத்தினை அச்சிடுவதற்காக பயன்படுத்துகின்ற அட்டைகள் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கு போதுமானது என்பதனால் துரிதமாக கொள்வனவு செய்யுமாறு ஆணையாளரினால் (சாரதி அனுமதிப்பத்திரம்) 2024 | கடந்த 03 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் இத்திணைக்களத்தின் சாரதி அனுமதிப் பத்திரத்தினை கொள்வனவு செய்யும் பெறுகை மேற்கொள்ளப்படவில்லை. எனவே இதனை ஒரு விசேட பெறுகையாக மேற்கொள்ளல் பின்வரும் காலப்பகுதிக்கு நிறைவேற்றப்பட்டது. | சாரதி அனுமதிப்பத் திரத்தினை அச்சிடுவதற்க ாக பயன்படுத்துகி ன்ற |

| | | | |
|---|---|---|---|
| | பெப்ரவரி மாத்தின் போது கணக்குகள் பிரிவிற்கு தெரியப்படுத்தியிருந்தும் 2024 மே மாதம் வரை சாரதி அனுமதிப்பத்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக சாரதி அனுமதிப்பத்திரத்தினை அச்சிடும் நடவடிக்கை தடைப்படுதல் அல்லது தனியார் பிரிவின் மூலம் அதிக விலை செலுத்தி அச்சிடும் ஆபத்து உருவாகியிருந்தது. | 2024-01-18 ஆந் திகதி வேரஹெர ஆணையாளரினால் (சாரதி அனுமதிப்பத்திரம்) 2024-01-29 ஆந் திகதி புதிய சாரதி அனுமதிப்பத்தித்திற்காக பொருள் விபரக் குறிப்பினைத் தயாரிப்பதற்காக தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கு தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க 2024-02-09 ஆந் திகதி பொருள் விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டது. 2024-02-14 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டு அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. 2024-03-05 ஆந் திகதி அமைச்சு அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் 2024-03-06 ஆந் திகதி பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டது. தொடக்க கேள்வி ஆவணத்தின் பிரகாரம் 2024-03-27 ஆந் திகதி கேள்வி ஆவணங்களைத் திறப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தம் 2024-03-18 ஆந் திகதி கேள்விதாரர்களுடன் நடைபெற்ற (Per bid meeting) இன் மூலம் கேட்பு மனுக்களைத் திறத்தல் 2024-04-10 ஆந் திகதிக்கு நீடிக்கப்பட்டது. பின்னர் அமைச்சு செயலாளரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க 2024-04-19 ஆந் திகதி வரை கேட்பு மனுக்களைத் திறத்தல் இரண்டாவது தடவையும் நீடிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது திறக்கப்பட்ட விலை மனுக்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கை இடம்பெறுகின்றது. | காட்டினை துரிதமாக கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கி) | சாரதி அனுமதிப்பத்திரத்தினை அச்சிடுவதற்காக வேரஹெர அலுவலகத்தில் மூன்ற அச்சு இயந்திரங்கள் மற்றும் அம்பாந்தோட்டை, அனுராதபுரம் அலுவலகங்களில் ஒரு அச்சு இயந்திரம் வீதம் ஐந்து அச்சு இயந்திரங்கள் பயன்படத்தப்பட்டிருந்த போதிலும் தற்பொழுது வரை அவற்றில் இரண்டு அச்சு இயந்திரங்களை புனரமைப்புச் செய்வதற்குத் தேவையான பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்படாது நடவடிக்கை எடுத்ததன் காரணமாக சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடும் நடைமுறை எதிர்காலத்தில் அதிக அளவில் செயல் இழப்பதற்கு அல்லது அதிக பணத்தை செலுத்தி தனியார் துறையினரிடமிருந்து அச்சிட்டுக்கொள்ள வேண்டி ஏற்படும் அவதானம் உருவாகியிருந்தது. | சாரதி அனுமதிப்பத்திர அச்சு இயந்திரத்தினை திருத்தம் செய்வதற்காக இயந்திர முகவர் நிறுவனமான மெட்ரோபொலிடன் நிறுவனத்தினால் சமர்ப்பித்த விலை மனுக்களின் பிரகாரம் இயந்திரத்தை திருத்தம் செய்வதற்கு பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. | சாரதி அனுமதிப்பத்திரத்தினை அச்சிடுவதற்காக சில அச்சு இயந்திரங்களை துரிதமாக கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |